A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark

# தரங்கிணி



ரமணிசந்திரன்

# தரங்கிணி

## 1

அன்பு இல்லத்தில் அதிகாலையில் விழித்து எழுந்த பழக்கம் இன்னமும் தரங்கிணியை விடுவதாக இல்லை.

எழுபத்தைந்து ரூபாய் கொடுத்து, தம் சம்பாத்தியத்தில் தனக்காக என்று அவள் ஆசையாக வாங்கி வைத்திருந்த அலாரம் கடிகாரம் தன் அழகிய கிணுகிணுப்பைத் தொடங்குவதற்கு வெகு நேரம் முன்பாகவே பழைய வழக்கத்தில் ஐந்தரைக்கே அவளுக்கு விழிப்பு தட்டிவிட்டது. ஆயினும் படுக்கையை விட்டு எழ மனமற்று, அதற்கு அவசியமும் அற்றுப் படுக்கையிலேயே புரண்டு கொண்டிருந்தாள்.

ஆறுமாதங்களாக அனுபவித்து வரும் புதிய சுகம்! விழித்தபிறகும் இப்படி படுத்துக் கிடப்பது.

ஓரோர் சமயம் மனதுக்குள் ஏதோ குற்றம் புரிந்து விட்டாற்போல ஒரு மூலையில் உறுத்தும். அங்கே இல்லத்தில் மற்றவர்கள் எப்போதும் போல ஐந்தரைக்கு விழித்து, உடனே எழுந்து பல் துலக்கிவிட்டு அவரவர்

பணிகளைச் செய்யத் தொடங்கி இருப்பார்கள். கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்வது, துணி துவைப்பது, பாத்திரம் துலக்குவது, சமையலில் உதவுவது, இல்லத்துச் சின்னக் குழந்தைகளைப் பராமரிப்பது என்று இறக்கைகட்டிக் கொண்டு பறக்காத குறையாக வேக வேகமாக அவர்கள் வேலை செய்து கொண்டு இருக்கையில் தான் மட்டும் சுகமாகப் படுக்கையில் புரள்வது என்றால் கொஞ்...சம்... கொஞ்சம் ஒருமாதிரித்தான் இருந்தது அவளுக்கு.

ஆனால் அதற்காக இந்த சுகத்தை இழக்கவும் அவள் தயாரில்லைதான்.

இது அவள் கஷ்டப்பட்டு, கடினமான உழைப்பின் மூலம் அடைந்த சுகம்.

இல்லத்தில் அவளுக்குரிய வேலை அத்தனையையும் முகம் சுளிக்காமல் செய்து முடித்து, அதனிடையே முயன்று படித்து நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெற்றவள் அவள்.

கல்விக் கண்ணை மட்டும் திறவாமல் இல்லத்தில் அவரவருக்கு ஏற்றவாறு தொழில் பயிற்சியும் அளிப்பது உண்டு. தட்டெழுத்தும் குறுக்கெழுத்தும் பயின்று முடித்த தரங்கிணி, கணக்கிலும் வல்லவ்ளாக இருக்கவே எடுத்த எடுப்பிலேயே அவளுக்கு ஒரு வேலை - ஓரளவு நல்ல வேலையாகவே 'கிடைத்துவிட்டது.

சொந்தக் காலில் ஊன்றிக் கொள்ளும் திறம் கிடைத்ததும் ஆசிரம விதிப்படி வெளியேற நேர்ந்தபோது இதற்கெல்லாம் முழுமனதோடு வழிவகுத்துக் கொடுத்த 'அம்மா' கொடுத்த அறிவுரையை அவள் இதுவரை மறக்கவில்லை.



''எத்தனையோ கட்டுப்பாடுகள் இங்கே. இதை விட்டு வெளியேறும் போது கட்டவிழ்த்த கன்றாகத் துள்ளி குதித்து இங்கும் அங்கும் ஓடத்தான் ஆசைவரும், தரங்கிணி. ஆனால் பறவையின் சிறகுகளுக்கு அடியில் இருக்கும் வரைதான் குஞ்சுக்குப் பாதுகாப்பு. தனியே எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடனேயே எடுத்து வைக்க வேண்டும். பறவைக் குஞ்சை கவ்விச் சென்று கபளீகரம் செய்கிற கழுகு, கோட்டான் போல மனிதர்களிலும் எத்தனையோ பேர். பறவைகள் போல, மிருகங்கள் போல இந்தப் பொல்லாக் குணம் கொண்ட மனிதர்களை இனம் கண்டு கொள்வது எளிதல்ல. எனவே எல்லோரிடமும் எச்சரிக்கையுடனேயே பழகு. அடுத்தது உன் வருமானம். உனக்குக் கையில் பணம் வைத்துச் செலவு செய்து பழக்கம் இல்லை. இப்போது கையில் வரப் போகும் இந்த ஆயிரத்து நூறு மிகவும் பெரிய தொகையாக உனக்குத் தோன்றக்கூடும். கண்டதை வாங்கிக் கணக்கின்றிச் செலவு செய்து விடாமல் அளவோடு செலவு செய். உணவு, உறைவிடம், தேவையான உடை போக முடிந்த அளவு சேமித்து வை. மாரிக் காலத்துக்குச் சேமிக்கும் எறும்பைப் பார்த்துப் பாடம் கற்றுக் கொள்...''

கிளம்புகிற பரபரப்பில் இருந்த போதும் இந்தத் தாயார் சொல்வதெல்லாம் மற்றவர் நன்மைக்கே என்பதைப் பல சந்தர்ப்பங்களில் கண்கூடாய்க் கண்டிருந்த தரங்கிணி, அவரது வார்த்தைகளை முழுமனதோடு மனதில் இருத்திக் கொண்டாள்.

தகுதியைத் தந்து வெளியேற்றுவதோடு தன் கடன் முடிந்தது என்று விட்டுவிடாதபடி, தாயாரே-சாரதா

என்பது அவர் பெயர் - அறிந்தவர் மூலம் இந்த விடுதி வாசத்துக்கும் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

தரங்கிணிக்கும் விடுதி பிடித்துத்தான் இருந்தது. பலரோடு தரையில் பாய்விரித்துப் படுத்தவளுக்குத் தனியறையும், அங்கே போடப்பட்டிருந்த நாடாக் கட்டிலும் கூடச் சொர்க்கம் போலத்தான் தோன்றின.

இட்டிலி, தோசை, பூரி, சப்பாத்தி என்று ஏதாவது ஒன்று உரிய வியஞ்சனத்துடன் காலை உணவாக அங்கேயே கிடைத்தது. கேட்டால் மதியத்துக்கும் எலுமிச்சம் பழசாதம், புளிசாதம் என்று கட்டிக் கொடுத்தார்கள். மாலைக் காபி, இரவு உணவு எல்லாம் அதற்குரிய கட்டணத்தை முன் கூட்டியே செலுத்திப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அன்பு இல்லத்தில் எப்போதும் பசிக்குத்தான் புசிப்பது. ருசிக்கு அல்ல. ராமகிருஷ்ணமடத்தில் போலப் பெரிதாகத் துண்டமிட்ட காய்கறிகளுடன் கூடிய பருப்பு கூட்டி சோறு உண்டு பழகியவளுக்கு இந்த சிற்றுண்டிகளும், உணவு வகையறாக்களும் கூட அமுதமாகவே தோன்றின.

அங்கே தங்கியிருந்த மற்ற பெண்கள் சுவை பற்றிக் குறைகூறி முகம் சுளிக்கையில் அவளுக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆயினும் அவர்களைப் போல ஓட்டல் உணவில் வீண் செலவு செய்யும் விருப்பம் அவளுக்கு வந்தது இல்லை. இது பிடிக்காமல் போனால்தானே இன்னொன்று தேடத் தோன்றும்? இதுவே சுகமாக இருக்கையில் வேறு எதற்கு?

என்னேரமும் 'நைநை' என்று குறை கூறாமல் ஒரு அடக்கமான புன்னகையுடன் பழகிய தரங்கிணியை



விடுதியை நிர்வாகம் செய்த பெண்மணிக்கும் பிடித்துப் போயிற்று.

அலுவலகம் சென்ற பிறகுதான் சாரதா அன்னையின் புத்திமதியின் முழுப் பொருளையும் தரங்கிணி புரிந்து கொண்டாள்.

இச்சகம்பேசி, அவள் செலவிலேயே தன் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முயன்றவர்கள், நயமாகப் பேசி இச்சையைக் கிளப்ப முயன்றவர்கள், உரசிப் பார்க்க முயன்ற எருமைகள்... இயல்பான புத்தி கூர்மையோடு, தாயார் கொடுத்த அறிவுரையும் இருக்கவே தரங்கிணியால் எளிதாகவே எல்லாவற்றையும் சமாளிக்க முடிந்தது.

இந்த ஆறுமாதங்களில், மலர்ந்த முகமும் இனிய புன்னகையுமாக வளைய வந்தாலும், இவள் நேர் கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன்னடையும் கொண்ட நெருப்பு, பாரதியார் கண்ட புதுமைப் பெண் என்கிற அளவில் மதிப்பை வளர்த்துக் கொண்டாள்.

பணவிஷயத்திலும் அவள் ஆடம்பரச் செலவுகளை விடுத்தாளே தவிர தன் எளிய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளவே செய்தாள். அதிகவிலையற்ற ஆடைகள், உடைக்கேற்றபடி விலைகுறைவான, ஆனால் அடக்கமான பிளாஸ்டிக் அணிகலன்கள் என்று வாங்கிப் பொருத்தம் பார்த்து அணிந்து மகிழ்ந்தாள்.

பட்டும் தங்கமும் ஆசைப்பட்டால்தானே ஏக்கமும் செலவும்? அனாவசியச் செலவு செய்யாததால் பாங்கில் சேமிப்புக் கணக்கு நன்றாகவே அதிகரித்தது.

அலுவலக வேலையிலும் கெட்டிக்காரியாக இருக்கவே நிர்வாகத்தினரும் அவளை மெச்சிக் கொண்டனர்.

அடுத்து ஒருபதவி உயர்வுக்கும் சிபாரிசு போயிற்று.

எல்லாமாக அவளது தன்னம்பிக்கையை வளர்த்தன. விடுமுறை நாட்களும் கூட அவளுக்கு வெட்டியாகப் போகவில்லை. கையில் உணவுப் பொட்டலத்தோடு ஏதாவது லைப்ரரி, பார்க் என்று இனிமையாகவே பொழுது போக்குவாள்!

மொத்தத்தில் திருப்திகரமான நிம்மதியான வாழ்க்கை. தெளிந்த நல் நீர்த் தடாகம் போல எந்தவிதக் கலக்கமும் இல்லாத அமைதியான வாழ்க்கை.

அவளுக்கும் பிடித்திருந்தது.

மாதம் தோறும் சாரதா தேவிக்குத் தன்னைப் பற்றிய விவரங்களை எழுதுவதைக் கடமையாகக் கொண்டிருந்த வள், அந்தமாதக் கடிதத்திலும் இதையே குறிப்பிட்டு எழுதி, இந்த வாழ்வு கிட்டக் காரணமாயிருந்த அவ ளுக்கு நன்றி உரைத்து முடித்தாள்.

பொதுவாகச் சாரதா அன்னையிடமிருந்து பதில் கடிதம் ஏதும் அவளை நாடி வருவது இல்லை. அவர் எழுதிய முதல் கடிதத்தோடு சரி; ஆனால் பதில் எழுத அவருக்கு நேரம் இராது என்பதை உணர்ந்தவள் என்பதால் அதைக் குறையாகப் பாராட்டி ஒதுங்காமல் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தாள். அவரது ஒரே கடிதத்தையும் பத்திரப்படுத்தி வைத்திருந்தாள்.

அன்று அவளுக்கு ஒரு கடிதம் வந்திருப்பதாகக் கூறி ஆஃபீஸ் பையன் ஒரு கவரைக் கொண்டு வந்து கொடுக்கவும் அன்னையிடமிருந்துதான் என்றெண்ணி ஒரு கணம் அவள் மனம் துள்ளியது.

ஒரு கடிதத் தொடர்புக்காக தன்னுள் இப்படி ஓர் ஏக்கம் இருப்பதை அப்போது தான் உணர்ந்து வியந்தவ ளாய்க் கடிதத்தைப் பெற்றவள் பிரித்துப் பாராமல் அப்படியே கைப்பையுள் வைத்தாள். காரணம்.. ஒன்று, அப்போதைக்கு வேகமாக அவள் முடித்தாக வேண்டிய அந்த சில 'ஸ்டேட் மென்ட்'டுகள். அடுத்தது அன்னை யின் கடிதத்தை ஆர அமர ரசித்துப் படிக்க வேண்டும் என்கிற எண்ணம்.



வேலை முடிந்து, விடுதி திரும்பி, முகம் கழுவி, காபியுடன் அறைக்குள் சென்று கடிதத்தை எடுத்துப் பார்த்த போதுதான் அந்த உறையின் அடியில் இருந்த அனுப்புகிறவரின் முத்திரையைத் தரங்கிணி கவனித்தாள்.

தேவசகாயம் அசோசியேட்ஸ்!

ஆக இது இல்லத்துத் தாயிடமிருந்து வந்த கடிதம் அல்ல.

ஏமாற்றத்தை விழுங்கிக் கொண்டு மேலே பார்த் தாள்! 'லீகல் அட்வைசர்ஸ்' என்ற அடுத்தவரி ஆச்சரி யத்தை அளித்தது.

அவசரமாக பிரித்துப் படித்தவளின் முகம் சுருங்கி யது.

கடிதம் சுருக்கமாகவே இருந்தது.

மேட்டுப்பாளையத்தின் அருகே இருக்கும் 'பஞ்சவடி' என்று அழைக்கப்படும் அனாதை இல்லத்தில் வளர்ந்து, ஆறு மாதங்களுக்கு முன்பாக அங்கிருந்து வெளியேறி, 'அகர்வால் இன்டஸ்ட்ரீ'ஸில் அக்கவுண்ட்ஸ் பிரிவில் வேலை பார்க்கும் தரங்கிணி என்று அழைக்கப்ப டும் பெண் மெய்யாகவே அவள்தான் என்பதற்கான சான்றுகளுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு, பூர்வீகச் சொத்து

சம்பந்தமான பேச்சு வார்த்தைக்காக, வரும் புதன் கிழமை மூன்று மணிக்கு வந்து சேருமாறு அவளுக்கு அதிகாரத்துடன் கட்டளையிட்டது கடிதம்.

கடிதத்தின் தொனியில் எரிச்சலுற்றவளாகப் பின் குறிப்பைப் பார்த்தவளுக்குச் சினம் பொங்கியது.

கொண்டு வரும் சான்றுகள் உண்மையானதாக இருக்க வேண்டுமாம். பொய்ச்சான்றுகளாக கொணர்ந்து ஏமாற்ற முயன்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க நேரிடுமாம்! கடுமையாக எச்சரித்திருந்தது பின் குறிப்பு.

ஏமாற்றுகிறவளா? அவளா?

அவள் இந்தமாதிரி ஏமாற்றக்கூடும் என்று எண்ணுவதற்கோ, அதை வார்த்தையால் வடிப்பதற்கோ இந்த ஆளுக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்?!

ஆத்திரத்துடன் எழுதிய ஆளின் பெயரைத் தேடினாள் தரங்கிணி.

கையெழுத்து இருக்க வேண்டிய இடத்தில் ஒரு கோழிக் கிறுக்கலைக் காணவும் மேலும் வெறுப்புற்று, கடிதத்தின் தொடக்கத்தைப் பார்த்தாள்.

காகிதத்தின் மேல் மூலையில், மிஸ்டர் அருண்குமார், 'ஜூனியர் பார்ட்னர்' என்று 'ஸ்க்ரீன் பிரிண்டிங்'கில் அழகாக எழுதப்பட்டிருந்தது.

அருண்குமாராம் அருண்குமார். சரியான அமாவாசை என்று ஆத்திரத்துடன் கடிதத்தைக் கசக்கி ஒரு காகித உருண்டையாக்கி, மூலையில் இருந்த குப்பைக் கூடைக்குள் விட்டெறிந்தாள் தரங்கிணி.



தெளிவான குளப்பரப்பில் கல்லை விட்டெறிந்தாற் போல, நாலைந்து நாட்கள் தரங்கிணியின் அமைதியான மனநிலை மாறி உள்ளூர அந்த அருண்குமார் மீது எரிச்சலும் ஆத்திரமுமாக, வெளியே அதை மறைத்து மற்றவர்களிடம் இயல்பாக நடந்து கொள்ளும் முயற்சியுமாக அவள் சங்கடப்பட நேர்ந்தது.

## 2

சில தினங்கள் தான் இந்த நிலை, அப்புறமாக, அதிலும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த அந்தப் புதன் கிழமை தாண்டிய பிறகு, முக்கியமாக அதில் சொல்லப் பட்டிருந்த நேரத்தில் பிடிவாதமாய் அலுவலகத்தில் அவளது இடத்தில் அமர்ந்து தப்புத்தப்பாக வந்த 'டோட்டலை' மீண்டும் கூட்டி சரிபார்த்துக் கழித்த பிறகு எல்லாமே பழைய மாதிரி இயல்பாகி விட்டது அவளுக்கு.

சொல்லப்போனால் முன்னை விடவும் உற்சாகமாக இருந்தாள் எனலாம். எதையோ வென்றுவிட்ட உணர்வு! புதனன்று மூன்று மணியிலிருந்து அவளுக்காக அவனது அலுவலகத்தில் காத்திருந்து அசடுவழிந்திருப்பானே அந்த அருண்குமார்!

ஆனால் அவளது நிம்மதியை நிலைக்க விடக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டாற் போல அவனது அடுத்த கடிதத்தை அனுப்பி வைத்தான் அருண்குமார்.

காரண காரியத்தை முன் கூட்டி அறிவியாமல், ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு சந்திப்பில் அவள் வந்து கலந்து கொள்ளாமல் இருந்த பொறுப்பற்ற தன்மையை எடுத்துக் காட்ட வேண்டியிருந்ததை வருத்தத் துடன் விளக்கி விட்டு, மாற்று சந்திப்பிற்கான நேரமாக வரும் திங்களன்று காலை பத்து மணிக்கு அவனது அலுவலகத்துக்குத் தவறாமல் வந்து சேருமாறு உத்தரவிட் டது இந்தக் கடிதம்.

திங்கட்கிழமையன்று காலை பத்து மணியாம். இவள் என்ன வேலை வெட்டி இல்லாமல் உட்கார்ந்து உண்ணு கிற கோடீசுவரி என்று நினைத்தானா இந்த அருண் குமார்?

ஒரு வார நாளில் அலுவலக நேரத்தில், எவனோ சொன்னான் என்று அவன் சொன்ன இடத்தில் ஆஜர் ஆவதற்கு என்று அனாவசியமாக லீவுபோடும் அளவு அவள் ஒன்றும் முட்டாள் அல்ல!

அடுத்த கடிதமும் முன்னதைப் போலவே குப்பைக் கூடையைச் சரணடைந்தது.

இரண்டு தரம் மூக்கறுபட்ட பிறகேனும் இவன் தொல்லை செய்யாதிருப்பானாக.

ஆனால் திங்களன்று சுமார் பதினோரு மணியளவில் அவளது அலுவலகத்துக்கு டெலிஃபோன் வந்தது.

''மிஸ் தரங்கிணி. கால் உங்களுக்கு வந்து பேசுங்க'' என்று மரியாதையுடன் அழைத்தான் டெலிஃபோன் ஆப்ரேட்டராகப் பணிபுரிந்த மனோகரன்.

வந்த புதிதில் 'ஓட்டலுக்கு வருகிறாயா, சினிமா வுக்கு வருகிறாயா' என்று ஏகவசனத்தில் அழைத்தவன் தான். இப்போதெல்லாம் ஏக மரியாதை.



உள்ளூர அந்த அருண்குமாராக இருக்கக் கூடும் என்று எதிர்பார்த்தே வந்தவளுக்கு, ஒரு பெண் குரல் கேட்கவும் கொஞ்சம் ஏமாற்றம்தான்.

அவனுடைய செகரட்டரியாம்.

இன்னாரென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அவள், மிஸ்டர் அருண்குமாரின் அலுவலகத் துக்கு வந்து அவரைச் சந்திக்க அவளுக்கு எப்போது வசதிப்படும் என்று வினவினாள். இனிய குரலில் தான். ஆனால் இந்தக் குரல் அவளது வேலைக்குரிய ஓர் அங்கமே. ஒருவர் நாளை உன் கழுத்தை அறுக்கப் போகிறார் என்று சொல்ல நேர்ந்தாலும் அதையும் இவள் இதே இனியகுரலில் தான் கூறுவாள் என்று நினைத்தாள் தரங்கிணி.

தன் குரலிலும் எரிச்சலைக் காட்டாமல் மறைத்து, இனிய குரலிலேயே ''இதோ பாருங்கள் மேடம் செகரட் டரி, எனக்கு உங்கள் பாஸ் யார் என்றே தெரியாது. முன்பின் தெரியாதவர்கள் கூப்பிடுகிற இடத்திற்கெல்லாம் சென்று எனக்குப் பழக்கம் இல்லை. அதனால் நான் அங்கே வருவதாகவும் இல்லை. இன்னொரு விஷயம். இது அலுவலக நேரம். இந்த நேரத்தில் என் வேலைக்கு சம்பந்தமற்ற எதையும் பேசவோ, செய்யவோ எனக்குப் பிடிக்காது. அதனால் ஃபோனை வைத்து விடுங்கள். தயவு செய்து இனி இதுபோல் ஃபோன் செய்யவும் வேண்டாம்.'' என்று முடித்தாள்.

''மேடம் மேடம் எங்கள் பாஸ் பெரிய வக்கீல். அவரைப் போய்த் தெரியாது என்கிறீர்களே, அவர் இப்போது...'' என்று அவசரமாக அவள் பேசியபோது பேச்சில் குறுக்கிட்டு, ''சாரி. எனக்குத் தெரியாது என்றால்

தெரியாது தான் வைத்துவிடுங்கள்'' என்று கூறி ரிசீவரை வைத்துவிட்டு, ''நன்றி மிஸ்டர் மனோகரன்'' என்று ஒரு புன்முறுவலுடன் திரும்பி நடந்தாள் அவள்.

பெரிய வக்கீலாம். பெரீ...ய்ய வக்கீல் என்று ஏளனமாக நினைத்தபடி நடந்தவளுக்கு ஒன்று தோன்றியது.

வக்கீல்கள் வேலை செய்யவேண்டியது கோர்ட்டில். இந்த ஆள் எந்த நேரமும் அலுவலகத்தில் தானே இருப்பது போலத் தெரிகிறது. இவனெல்லாம் பெரிய வக்கீலாக்கும்! பாவம், இப்படிச் சொல்லாவிட்டால் அவள் வேலை நிலைக்காதோ, என்னவோ என்று இளக்காரமாய் எண்ணியபடி தன் இருக்கையில் அமர்ந்தாள் தரங்கிணி.

என்னவோ இவ்வளவு தூரம் முகத்தில் அடித்தாற் போலச் சொல்லிவிட்டதால் இனி மேல் இவன் தொல்லை இராது.

யாரோ ஒருவன் தொழில் ரீதியாகத்தான் அழைக்கிறான். முகம் அறியாத ஒருவனிடம் இவ்வளவு எரிச்சல் தோன்றுவானேன்? என்றும் தோன்றவே செய்தது.

பிடிவாதமாக மனதிலிருந்து அந்த அருண்குமார் தொடர்பான விஷயங்களை அகற்றி விட்டு வேலையில் மும்முரமானாள் தரங்கிணி.

செகரட்டரி யசோதாவின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் வெளிப்படையாகத் தெரியாத போதும் அவள் தன்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு இருப்பது போலத் தோன்றியது அருண்குமாருக்கு.

அதிலும் அந்தப் பெண் தரங்கிணி அவனைப் பற்றித்



தெரியாது என்று கூறியதையும் கூட அவள் ஒப்பித்துத் தான் ஆகவேண்டும் என்று இல்லை என்றே அவனுக்குத் தோன்றியது.

ஆனால் அவளைப்போலவே உணர்ச்சியற்ற முகத்துடன் அதையும் கேட்டு முடித்துவிட்டு, இதுபற்றித் தொடர்ந்து நினைக்கக்கூட நேரம் இல்லாதபடி அவளுக்கு ஒரு மூச்சு வேலை கொடுத்துவிட்டு ஒரு சிகரட்டைப் பற்றவைத்தான் அவன்.

என்னமாதிரி முரட்டுப்பெண் அந்தத் தரங்கிணி! பூர்வீகச் சொத்து விஷயமாக என்ற பிறகும் சும்மா உட்கார்ந்திருப்பது என்றால் பணத்தாசை இல்லாதவள் போல நடிக்கிறாளா? அல்லது பணத்தின் மகிமை புரியவில்லையா? மெய்யாகவே பணத்தாசை கிடையாது என்றால் அவனால் அதை நம்பமுடியாது.

அவளைச் சிரமப்பட்டுத் தேடிக் கண்டு பிடித்ததோடு வேலை முடிந்தது என்று நினைத்தால் இந்த முசுட்டுப் பெண்ணால் அது ஜவ்வுமாதிரி இழுத்துக் கொண்டே போகிறதே!

அவனே எரிச்சல்பட்டுக் கொண்டிருந்தபோது சீனியர் அவனை அழைப்பதாக யசோதா கூறவும் எழுந்து அவரது அறைக்குச் சென்றான்.

'தேவசகாயம் அசோசியேட்'சின் இப்போதைய சீனியர் பார்ட்னர் திருவாளர் சகாயம் தான். முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக அவரும், அருண்குமாருடைய தந்தை தேவராஜனுமாகக் இந்தப் பெயரில் கூட்டாகத் தொழில் தொடங்கினர். தொழில் சூடுபிடித்து நன்றாக வளர்ந்தது. இவர்களிடம் சென்றால் தோல்வி இல்லை என்கிற அளவுக்குப் புகழ் பெருகியது.

இந்தத் தொழிலில் நல்ல வருமானம் கண்ட தேவரா ஜன் மகனையும் வக்கீலாக்கினார். சில ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சிறு இதயபாதிப்புக்கு ஆளானவர். அதன்பின் குன்னூரில் ஒரு எஸ்டேட்டை வாங்கிக் கொண்டு, மனைவியுடன் அங்கேயே இருந்து ஓய்வாக வாழத் தொடங்கினார்.

கூட்டுத் தொழில் தொடங்கும் போதே சகாயம் தான் சீனியர். அவருக்கு இரு மகள்கள் மட்டுமே. தேவராஜன் சற்று தாமதமாகத் திருமணம் செய்து பிள்ளை பெற்றதால், சகாயத்தின் மகள்கள், அருண்குமாரைவிட வயதில் மிகவும் பெரியவர்களே. சகாயத்துடைய மூன்றாம் தலை முறை தேவராஜனுடைய வாரிசுக்கு இணையானதாக இருந்தது.

வயதிலும் மூத்து, தொழில் அறிவிலும் களஞ்சிய மாக இருந்த சகாயத்திடம் அருண்குமாருக்குப் பெரும திப்பு. சிறுவயதில் இருந்து ஒரே குடும்பம் போல ஒட்டிப் பழகிவிட்ட பிரியமும் இருந்தது. பெற்றவர்கள் குன்னூ ரில் குடி புகுந்து விட்டபிறகு, சகாயத்தின் வீடே அருண்குமாருக்கும் சொந்தவீடு போல் ஆயிற்று.

சொல்லப்போனால் சகாயத்துடைய குடும்பம் அங்கே இருக்கும் தைரியத்தினால்தான் தேவராஜன் கவலையற்று குன்னூரில் வசிக்கத் தொடங்கியது கூட. கொஞ்ச காலமாக, இந்த இரு குடும்பங்களின் நெருக் கத்தை மேலும் வலிவுறச் செய்யும் பாலமாக இன்னொன் றும் சகாயத்தின் நல்லாசியுடன் உருவாகிக் கொண்டு இருந்தது.

எனவே, அவர் அழைத்தார் என்றதும், மற்ற வேலைகளை அப்படியே விட்டு விட்டு அவரது அறைக் குச் சென்றான் அருண்குமார்.



''ஹலோ அங்கிள்!'' என்று முறுவலோடு வந்து அமர்ந்தவனைப் பெருமிதத்துடன் நோக்கினார் சகாயம். அவருக்கு அவனும் ஒரு சொந்தப் பேரன் போலத்தான். கெட்டிக்காரப் பேரன்! மரியாதை தெரிந்தவன். வினு வுக்கு ஏற்றவன்... ''என்ன விஷயம் அங்கிள்? எதற்காகக் கூப்பிட்டீர்கள்?''

''ம்?... என்று நிமிர்ந்து, அதுதான் அந்த அடையாறு பங்களா விஷயம் அப்பா. அதை அப்படியே போட்டு விட்டாயே! அந்தப் பெண்ணைத் தேடிக் கண்டுபிடித் தாயா? என்ன தாமதம்?'' என்று விசாரித்தார்.

லேசாகத் தோளைக் குலுக்கினான் அருண்குமார். எல்லாம் அந்தப் பெண் தரங்கிணியால் வந்த தொல்லை. கூப்பிட்டால் வந்து சொத்தை வாங்கிக் கொண்டு போய்த் தொலைப்பதுதானே...

''பெரிய பிரச்சினை என்று ஏதும் இல்லை அந்தப் பெண்ணும் வேலை பார்க்கிறவள். வேலை நாட்களில் லீவு எடுக்க முடியாது போலத் தெரிகிறது எப்படியும் பார்த்து சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.'' என்றான் அருண் குமார்.

''செய்யப்பா எப்படியோ அந்த விஷயம் சீக்கிரம் முடிவானால் சரி. நமக்கு அதில் வேறுவித அவசரம் இருக்கிறதல்லவா? கொஞ்சம் கூடக் குறையப் போனா லும் பரவாயில்லை என்கிறான் மோகன்.''

''ஓகே, அங்கிள். பார்க்கிறேன். இன்று என் வேலை களை ஓரளவு முடித்து விட்டேன். மீதியை வினோதாவை விமான நிலையத்தில் விட்டுவிட்டு வந்து பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் அதிகப்படி வேலைகளை இழுத் துப் போட்டுக் கொண்டு செய்ய வேண்டாம். சரிதானா?

வரட்டுமா?'' என்று எழுந்தான் அருண்குமார்.

''ஓகே. செய்.'' என்று தலையாட்டியவர் மீண்டும் அவனை அழைத்தார். ''அருண், வினு பற்றி நான் சொன்னது நினைவிருக்கிறதில்லையா? இன்னமும் நீ ஒன்றும் சொல்லவிலையேப்பா?'' என்று வினவினார்.

''அப்பா நன்றாகி விடட்டும் என்றேனே அங்கிள். எதுவானாலும் அதன்பிறகு செய்யலாமே.'' என்று சின்னவன் பதில் கூறவும், ''அதுவும் சரிதான்'' என்று ஒப்புக் கொண்டார். ''தேவா மறுக்கப் போவது இல்லை. ஆனாலும் வயது ஆகிறதுபார். சீக்கிரமாக எல்லாம் பார்த்துவிட மனம் ஆசைப்படுகிறது.'' என்று சிரித்தார் அவர்.

''வயதாகிறதா? உங்களுக்கா? ஆன்ட்டி கேட்டால் அடிக்க வருவார்கள்'' என்று அருண் கேலிக் குரலில் கூறி நகைக்கவும் உடன் இணைந்து சிரித்தபடியே அவனுக்கு விடை கொடுத்தார் அவர்.

சகாயத்துடைய மனைவி கொஞ்சம் ஒல்லி ரகம். அதனால் அம்மாவுக்கு பலவீனம் என்று அவருடைய மூத்த மகளான மாலதி, குடும்பத்துடன் தந்தைக்கு உதவியாய் அவரது வீட்டிலேயே வந்திருந்து வசிக்கலானாள். மகள் கூடவே இருப்பது பெற்றோருக்கும் பிடித்தம் தான். பேரப் பிள்ளைகளைக் கொஞ்சி செல்லம் கொடுக்கலாமே! சகாயத்தின் வீட்டுக்குச் சென்று, அவருடைய பேத்தி வினோதாவை விரட்டுவிரட்டு என்று விரட்டிக் கிளப்பி, வேகவேகமாக விமான நிலையத்தை அடைந்தால் ஏதோ இஞ்சின் கோளாறு, விமானம் கிளம்ப இன்னமும் மூன்று மணி நேரம் ஆகும் என்றார்கள்.

இளம் சிவப்பாய்ச் சாயமிட்ட உதடுகளை எழி



லாய்ப் பிதுக்கினாள் வினோதா. ''விரட்டியடித்தீர்களே, இப்போது பாருங்கள். இன்னும் கொஞ்சம் நிதானமாகவே 'டிரஸ் பண்ணிக் கொண்டு வந்திருக்கலாம்'' என்றாள் குறையோடு.

''ஒழுங்காக விமானம் கிளம்புவதாக இருந்தால் இப்போதே 'ரிப்போர்ட்டிங் டை'முக்கு நீ அரை மணி நேரம் லேட் தெரியுமா...'' என்றபடி வினோதாவைப் பார்த்த அருண் சட்டெனச் சிரித்தான்.

இடையை இறுக்கிப் பிடித்திருந்த ஒரு சாயம்போன ஜீன்சும், சாண் உயரம் வயிற்றைக் காட்டி அதற்குமேல் ஒரு பெரிய முடிச்சுடன் தொள தொளப்பான முக்கால்கை சட்டையும்!

இதில் இன்னமும் 'நிதானமாய்' டிரஸ் பண்ண என்ன இருக்கிறது?!

அவளிடமே கேட்டான்.

அவள் மீண்டும் உதட்டைக் குவித்தாள். 'இதெல்லாம் உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே அருண். இந்த டாப்சின் முடிச்சு சரியாக அமையவில்லை தெரியுமா? அத்தோடு இந்த "டாப்'சே இதற்குப் பொருத்தமா இல்லையா என்று எனக்குச் சந்தேகம். இதைவிட, பிங்க் லேசில் ஒரு கையில்லாத சட்டை ஒன்று வாங்கியிருந்தேன். அதைப் போட்டு, அதே கலரில் லிப்ஸ்டிக் தீட்டியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள், அருண்?''

''எது? 'ரிடக்ஷன் ஸேல்' என்று போய் அதிகவிலை கொடுத்து வாங்கினாயே, அந்த விலை பனியனா? கண்ராவி. அத்தனை பயலும் உன்னைத்தான் வெறிப்பான்கள்.''

A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark

கர்வமாய்ச் சிரித்தாள் வினோதா "அழகாய் இருந்தால் அப்படித்தான் பார்ப்பார்கள்!"

"ஆபாசமாய் இருந்தாலும் தான்" என்று சுருக்கெனச் சொல்லிவிட்டான் அவள் முகம் கன்றவும்," அடிக்க வராதே தாயே. அப்புறம் அத்தனைபேரும் நம்மைப் பார்ப்பார்கள்." என்று ஏதோ சொல்லிச் சமாளித்தான்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தான். 'இன்னமும் கிட்டத்தட்ட மூன்று மணி நேரம்! அவ்வளவு நேரம் என்ன செய்வது?" என்றான்.

"ஏசி லவுஞ்ச். ஜாலியாக உட்கார்ந்து நம் எதிர்காலம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கலாம். ஏதாவது கூல்டிரிங்க் ஆர்டர் பண்ணலாமா?" என்று குழைந்தாள் வினோதா.

"ம்ம்... வீண் நேரவிரயம். அதைவிட ஒரு டெலிஃபோன் செய்துவிட்டு வருகிறேன்" என்று கூறி அவள் பதில் கூற இடம் கொடாமல் விரைந்து சென்றான்.

அவன் திரும்பி வந்ததும் "என்னோடு பேசுவது நேரவிரயமா?" என்று பாய்ந்தாள் வினோதா.

"பணக்கணக்கில் பார்த்தால் அப்படித்தான்," என்றவன் அவள் மீண்டும் சினம் காட்டுமுன், "ஒரு 'கேஸ்' வினோதா. அந்த ஆளை உணவு இடைவேளையின் போது மட்டும்தான் பார்க்கமுடியும். அவர்கள் கம்பெனி உணவு இடைவேளை ஒன்றிலிருந்து இரண்டு வரை. வேகமாகப் போனால் பார்த்துப் பேசி முடித்துவிடலாம். வா..." என்றவன் அவள் தயங்குவதைப் பார்த்து "இது உன் வீட்டு லாபத்துக்காகவும் தான், வினோ, வா. காரில் போய்க் கொண்டே சொல்லுகிறேன்," என்று நயமானகுரலில் கூறவும் ஒருவாறு அவனோடு சென்றாள் வினோதா.



கூடவே வந்தவளுக்கு அந்த அலுவலகத்தைக் கண்டதும் பிடிக்காமல் போயிற்று. "ஏ.சி.கூட இல்லையா?" என்று முகம் சுளித்தவள், "அருண், நீங்கள் போய் அந்தப் பெண்ணிடம் பேசுங்கள். எனக்கு இந்த வெக்கையும் வெயிலும் பிடிக்கவே இல்லை. அதனால் அதோ அந்தத் தெரு முனை ஓட்டலில் உள்ளே ஏசி ரூமில் ஏதாவது குளிர்ச்சியாகக் குடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். வேலை முடிந்ததும் அங்கே வந்து விடுங்கள்." என்றாள்.

"உன்னிஷ்டம்." என்று கூறி மனமற்று கார்ச் சாவியை அவளிடம் கொடுத்தான் அருண். "என்கார் பத்திரம்." என்று விளையாட்டு போல எச்சரித்து விட்டு [illegible]கினான்.

அவள் விர்ரென்று காரைக் கிளப்புவதைக் கண்டதும் ஒருதரம் கண்களை இறுக, மூடித்திறந்தவன் சட்டெனத் திரும்பி 'அகர்வால் இன்டஸ்ட்ரீ'சின் அலுவலகத்தினுள் சென்றான். எல்லாம் இந்தப் பெண்ணால்... அவள் பெயரென்ன?... தரங்கிணி. இந்தத் தரங்கிணியால் வந்தது. அவனது அருமைக் கார் சேதம் ஏதும் இல்லாமல் கைக்கு வந்து சேருமோ என்னவோ?

தன் எளிய உணவை முடித்துவிட்டு, பக்கத்து 'சீட்' காரி தந்த வாரப்பத்திரிகையில் அலங்காரப் பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் தரங்கிணி.

விதம்விதமான கூந்தல் அலங்காரங்களைக் காண்கையில் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. சுத்தமாகப் பராமரித்து, இரண்டு திருப்புதிருப்பிப் பின்னலிட்டு, ரப்பர் பாண்ட் போட்டுக் கொண்டாலே நன்றாகத்தானே இருக்கிறது. இதற்குப் போய் இவ்வளவு வேலை செய்து, பொழுதையும் பணத்தையும் செலவு செய்வானேன்?

என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தவள் அருகில் நிழலா டவும் சட்டென நிமிர்ந்தாள்.

''இதான் சார், தரங்கிணியம்மா. பார்த்துக்க. உன் னைப் பார்க்கணுமின்னு கேட்டாரு. இட்டாந்தேன்.'' என்று கூறி அந்த ஐம்பது வயது ஆபிஸ்பையன் அகன்றுவிட, சற்றுத் திகைப்புடன் எழுந்தவளுக்கு, அருகில் நின்ற அந்த நெடிய புதியவன் யாரென்று சட்டெனப் புரிந்து போயிற்று.

கூப்பிட்டால் வரவில்லை. வேலை நேரத்தில் டெலி ஃபோனில் பேசவும் விருப்பமில்லை என்றதும் எந்த விதத் தடங்கலும் சொல்ல முடியாதபடி இந்த இடை வேளை நேரத்தில் அவன் வந்ததை அவளால் உள்ளூர மெச்சாதிருக்க முடியவில்லை.

## 3

தரங்கிணியின் உள்ளுணர்வு கூறியபடி வந்தவன் அருண்குமார்தான். தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டவன் ''உங்களிடம் சற்றுப் பேசித்தான் ஆக வேண்டும். அதனால்தான் நேரிலேயே வந்தேன்'' என் றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்

'நீ வராமல் இருந்துவிட்டாய்' என்ற வார்த்தைக ளைச் சொல்லாமலே அவன் உணரவைக்கவும், ''உணவு இடைவேளை முடிகிறநேரம். எனக்கும் வேறு வேலை இருக்...'' என்றவளை அவன் இடைமறித்துப் பேசினான்.

''என்வேலை ஐந்தே நிமிடங்களில் முடிந்துவிடும்.



இங்கேயே பேசுவதானாலும் சரி. அல்லது பார்வையாளர் அறை என்று ஏதாவது இருந்தால், அங்கே சென்று பேசுவதானாலும் சரி.'' என்றான் அவன் சற்று அழுத்த மான குரலில்.

ஒருகணம் யோசித்துவிட்டு, ''வாருங்கள்'' என்று முன்னே நடந்தாள் தரங்கிணி.

மெல்லிய இடை அசைய, அதற்கேற்ப அடர்த்தி யான நீண்ட கூந்தல் ஆட அவள் செல்வதை உள்ளூர ரசித்தபடி அவளைப் பின் தொடர்ந்தான் அருண்குமார்.

''உட்காருங்கள்'' என்று கூறித் தானும் அமர்ந்தபடி, ''என்ன விஷயம்? சீக்கிரம் சொல்லுங்கள்.'' என்று விசாரித்தாள் தரங்கிணி.

என்னையே விரட்டுகிறாளே என்று உள்ளூர நினைத்தபடி, ''உங்கள் தாயாருடைய தகப்பனார் உங்க ளுக்கு அடையாறில் ஒரு வீடு எழுதி வைத்திருக்கிறார். அதுபற்றி.'' என்று அவன் கூறுகையில், ''சாரி.'' என்று இடைமறித்தாள் தரங்கிணி.

'நீங்கள் வேறு யாரோ என்று என்னை எண்ணிப் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். எனக்கு உறவினரே கிடையாது. '' என்று பட்டுக்கத்தரித் தாள் போல முடித்தாள்.

''உறவினர் இல்லாமல் யாருமே இருக்க முடியாது மிஸ்தரங்கிணி. அவர்கள் யார் என்று நீங்கள் அறிந்திருக் கவில்லை. அவ்வளவுதான். உங்கள் தாயாரின் பெயர் விமலாதானே. தந்தை பெயர் தனஞ்சயன் சரிதானே?''

''உம்.'' என்றாள் அவள் சுருக்கமாக.

''உங்கள் தாத்தா பெயர் தெரியுமா?''

''தெரியாது. தெரிந்து கொள்ளும் அக்கறையும் கிடையாது.'' என்றாள் அவள் வறண்ட குரலில்.

சின்னஞ்சிறு வயதில் தந்தைக்கு மருத்துவம் செய்யப் பணம் இல்லாமல் அவர் மாள நேர்ந்ததாக அவளுக்குக் கனவு போல ஒரு நினைவு. 'அவ்வளவா? என்னிடம் அவ்வளவு பணம் இல்லையே' என்று தாய் பதறியது போல ஒரு தோற்றம். பிறகு பசி பசி என்று அழுததுபோலச் சில நினைவுகள்.

பிறகு ஒருதரம் சாரதா அன்னையும் அதைத்தான் உறுதிப்படுத்தினார். எத்தனையோ நாள் தான் பட்டினி கிடந்து, மகள் வயிற்றை நிரப்ப முயன்று, கடைசியாக இல்லத்தில் அவளை ஒப்புவித்துவிட்டு அவளைப் பெற்றவள் உயிரை விட்டதாக.

அவளுடைய தாயாருக்கோ, தகப்பனாருக்கு உறவு என்று யாரும் இருந்திருந்தால் இந்த நிலை நேரவிட்டிருப்பார்களா? ஒன்று அப்படியாருமே இல்லாத நிலையாய் இருந்திருக்க வேண்டும். அல்லது அவளுடைய பெற்றோரை அவர்கள் உதறி கைகழுவி விட்டிருக்க வேண்டும். முதல் விதம் என்றால் அவர்களைப் பற்றி நினைத்துப் பயன் இல்லை. இரண்டாம் விதம் என்றால் அவர்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பது கூடப் பாவம் என்பது தரங்கிணி எடுத்திருந்த முடிவு.

இப்போது இந்த அருண்குமார் தாய்வழித் தாத்தா பற்றிப் பேசியபோது உள்ளூர மண்டிய வெறுப்பை மறைப்பதே அவளுக்குக் கடினமாகப்பட்டது.

''ஆனால் உன் தாத்தாவுக்கு அக்கறை இருந்திருக்கிறது.'' என்றான் அருண்குமார்.

''அப்..ப்படியா!'' என்றாள் அவள் ஏளனமாக.



''ஆமாம்,'' என்றான் அவன் அழுத்தம் திருத்தமாக. ''இன்றைக்கு அடையாறில் மூன்று மனையளவு நிலத்தில் பெரிய வீட்டை, உன் அம்மா ஓடி விளையாடி வளர்ந்த இடம் என்கிற ஒரே காரணத்துக்காக உனக்கு எழுதி வைத்திருக்கிறார் என்றால் அக்கறை இல்லாமலா செய்வார்?'' என்று வாதிட்டான்.

''ஏன்? இந்தச் சொத்தை எழுதிவைக்க அவருக்கு வேறு ஆள் அம்பு இல்லையாமா?''

''இருக்கிறார்கள். உன் மாமன்மார் இரண்டு பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தன் தொழில்களையும், வேறு சில சொத்துக்களையும் கொடுத்திருக்கிறார். இந்த வீட்டை மட்டும் மகள் நினைவாக மகளுடைய வாரிசுக்கே கொடுத்திருக்கிறார்.

''இதையும் அவர் அவர்களுக்கே கொடுத்திருக்கலாம்.'' என்றாள் தரங்கிணி சற்று வெறுப்புற்ற குரலில்.

''அந்த வீட்டைப் பார்த்தபிறகு உன்...உங்களால் இப்படிப் பேச முடியாது.'' என்றான் அருண்குமார்.

அவன் திருத்திக் கொண்டபிறகே இடையில் அவன் ஏக வசனத்தில் பேசியதை உணர்ந்து கொண்டவள் உள்ளூர ஆச்சரியப்பட்டாள். மானம் மரியாதை விஷயத்தில் அவ்வளவு கண்டிப்பாக இருப்பவள் இதை எப்படிக் கவனியாமல் விட்டாள்?!

''இதில் நீங்கள் எங்கு வருகிறீர்கள்?''

'இங்கே தான்' என்று வேடிக்கையாகத் தொடங்கியவன் அவள் முகம் கடுக்கவும் விஷயத்துக்கு வந்தான். ''உங்கள் தாத்தவின் கம்பெனிக்கு நாங்கள் சட்ட ஆலோசகர்கள். உயில் எழுத அழைத்ததும் எங்களைத்தான்.

உயிலை நிறைவேற்றும் பொறுப்பும் எங்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் உங்களைத் தேடிக் கண்டு பிடித்தோம். இப்போது வீட்டை உங்களிடம் ஒப்படைத்து விட்டால் எங்கள் பொறுப்பு தீர்ந்தது. வீட்டைப் பார்க்க எப்போது வருகிறீர்கள்? வீட்டைப் பார்த்து விட்டால் பிறகு அதை என்ன செய்வது என்றும்...''

''அருண்'' என்று உச்ச ஸ்தாயியில் கீச்சிட்டது வீனோதாவின் குரல். 'இங்கே உட்கார்ந்து இன்னும் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்! நீங்கள் வருவீர்கள் வருவீர்கள் என்று வழிபார்த்து எனக்கு ஒரே போரடித்துப் போய்விட்டது. அந்த அனாதைப் பெண்ணுடன் பேசி முடித்துவிட்டீர்களா, இல்லையா?''

''வினோதா'' என்று அழுத்தத்துடன் அழைத்து, ''இவர்கள் தரங்கிணி. மிஸ் தரங்கிணி, இவள் மிஸ் வினோதா. என் பார்ட்னருடைய பேத்தி.'' என்று இருவருக்கும் அறிமுகம் செய்துவைத்தான்.

வினோதா பேசியது எதுவுமே காதில் விழாதது போன்ற பாவனையுடன், அவளை அப்போது தான் கண்டது போல உடனே நாகரீகமாக அறிமுகம் செய்வது போலவும் அருண் நடக்க தரங்கிணியும் அதே நாகரீகத்தைப் பின் பற்றி, எழுந்து, ரோஜா இதழ்களை லேசாகப் பிரித்து, முத்துப் பற்கள் எழிலுற மின்ன லேசாக முறுவலித்து, தாமரை மொட்டுப் போல் கரம்குவித்து, ''வணக்கம்'' என்று இயம்பினாள்.

கண்களில் பளிச்சிட்ட மின்னல் மட்டும் இல்லாதிருந்தால் அவள் காதில் அந்த 'அனாதைப் பெண்' விழவே இல்லை என்று விடலாம்.



உள்ளூர மெச்சிக் கொண்டான் அருண். முகம் சுளித்துக் கறுத்தவள் வினோதா மட்டுமே. அதுவும் தன்பேச்சு தவறு என்று உணர்ந்தல்ல. அதை ஒதுக்கி, மறைமுகமாகக் கண்டித்த அருண்குமாரின் பேச்சினாலும், ஒத்து ஊதிய அந்தப் பெண்ணின் போக்கினாலும் தான்.

நான் என்ன தப்பாகவா சொன்னேன்? அவள் அனாதை தானே என்று தலையைச் சிலுப்பியவள், ஒப்புக்காகத் தரங்கிணிக்கு அவளைப் பாராமல், 'வணக்கம்' உரைத்து விட்டு, அருணிடம் திரும்பினாள். நீங்கள் இப்படிச் சாவகாசமாய் அரட்டை அடித்துக்கொண்டிருந்தால் என் ப்ளேன் பறந்துவிடும். நான் இன்று விமானத்தில் போக வேண்டும் என்பது நினைவிருக்கிறதா இல்லையா? கிளம்புங்கள்.'' என்று உரிமையோடு கையைப் பிடித்து இழுத்தாள்.

நிதானமாக அவள் கையை விலக்கி மணி பார்த்தான் அருண்குமார். ''நேரம் இருக்கிறது. வினோதா.'' என்றான் தணிவாக. இந்த நாகரீகப்பூச்சுடனே சுழன்று கொள்ள விரும்பி, ''எதற்கும் நீங்கள் கிளம்புங்கள், மிஸ்டர் அருண்குமார். நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.'' என்று அவனிடமும் கரம்குவித்துத் திரும்பினாள் தரங்கிணி.

''ஒருநிமிடம்'' என்று அவளை நிறுத்தி, ''வீட்டைப் பார்க்க எப்போது வருகிறீர்கள்? நாளைக் காலை...அல்லது மாலை...?'' என்று கேட்டான்.

''நாளைக்கு எனக்கு வசதிப்படாது.''

''நாளன்று? அல்லது வியாழக்கிழமை?'' என்றான். அவன் தொடர்ந்து அவளை நேராகப் பார்த்து, ''வார நாட்களில் வா என்றால் முடியாது, மிஸ்டர் அருண்குமார்'' என்றாள் அவள்.

''மாலையில் கூடவா?''

''இருட்டிய பிறகு நான் வெளியே தங்குவது இல்லை.''

''ஞாயிற்றுக்கிழமை?'' விடாப்பிடியாய்க் கேட்டான் அவன்.

தொடர்ந்து மறுப்பது சிறுபிள்ளைத்தனமாகப் பட்ட போதும் இவனோடு தனியே எங்கும் செல்ல தரங்கிணிக் குத் தயக்கமாக இருந்தது.

''பாருங்கள் மிஸ்டர் அருண்குமார். நான் பணக்காரி அல்ல. வாரமுழுவதும் அலுவலகத்திற்கு அணிந்து வருகிறவற்றை ஞாயிறன்றுதான் துவைத்து, உலர்த்தி பெட்டிபோட வேண்டும். அதற்கே கிட்டத்தட்ட மதிய மாகி விடும். அப்...''

''ஓகே. இந்த வாரம் சற்று முன்னதாக அந்த வேலையைத் தொடங்கிச் செய்யுங்கள். பதினோரு மணி அளவில் நான் வந்து...''

''அப்புறம் எப்போது போய் எப்போது திரும்பி எங்கள் வீட்டிற்குச் சாப்பிட வருவீர்கள்?'' என்றாள் வினோதா ஆத்திரத்துடன்.

''அதுதான் எப்போதுமே வருகிறேனே. இந்த வாரம் மட்டும் நான் வெளியே சாப்பிட்டுக் கொள்கிறேன். அம்மாவிடம் சொல்லிவிடு வினோதா'' என்றான். அவளை மேலே பேச விடாமல் தடுத்து, ''போய்க் காரில் ஏறு வினோதா. நான் இதோ வந்து விடுகிறேன்'' என்று அவளை வெளிப்புறமாகத் திருப்பிவிட்டு, ''மறக்க வேண்டாம், தரங்கிணி. ஞாயிறன்று நான் சொன்ன நேரத்தில் உங்கள் விடுதிக்கு வருகிறேன். உங்கள் விடுதி முகவரியை, டெலிஃபோனில் என் செகரட்டரி கேட்டு



கொள்வாள். வருகிறேன்'' என்று கூறியபடியே வினோ தாவைப் பின் தொடர்ந்தான்.

அவர்கள் இருவரும் சென்று வெகுநேரமான பிறகும் தரங்கிணியின் மனம் அன்றைய சந்திப்பிலேயே உழன் றது. அவர்கள் இருவரும் பழகிய விதத்திலும் பேசிய முறையிலும் தெரிந்த நெருக்கம் அவளை வெகுவாகப் பாதித்தது.

என்ன இயல்பாக அவன் கையைப் பற்றினாள் அந்த வினோதா! அதே போல எவ்வளவு சாதாரணமாக அவனைத் தொட்டு வாயில்புறம் திருப்பினாள். அந்த அருண்குமார்! எப்போதும் வருகிறேனே என்றானே! அப்படியென்றால் ஞாயிறுதோறும் அந்த வினோதாவின் வீட்டில்தான் அருண்குமாருக்குச் சாப்பாடா? ஏன் அப்ப டிச் செய்கிறான்? அவனுக்கென்று குடும்பம் ஒன்றும் கிடையாதா? அம்மா, அப்பா, மனைவி... சேச்சே... மனைவி இருந்தால் இன்னொருத்தியோடு இப்படிப் பழகுவானா?

அப்படியானால் அருண்குமார் வினோதாவை மணந்து கொள்ளப் போகிறானா?

தலையை உலுக்கிக் கொண்டு நடப்புக்கு வந்தாள் தரங்கிணி.

எதிரே இருந்த டைப்ரைட்டரில் ஆயிரம் ரூபாய்க்கு, ஒன்றாம் எண்ணை அடுத்து சைபர்களை வரி முடியுமட் டும் அடித்திருப்பதைப் பார்த்ததும் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள்.

என்ன பைத்தியக்காரத்தனம்! நல்லவேளையாக (மலைபோகுமுன்) கண்டுபிடித்தாளே. காகிதத்தை டைப் ரைட்டரிலிருந்து உருவிக் கசக்கி எறிந்தாள்.

எதற்கும் இருக்கட்டும் என்று சிறு சந்தேகத்துடன் அதற்கு முன் டைப் செய்து வைத்த காகிதங்களை எடுத்துச் சரிபார்த்தவளுக்கு ஒரு மாதிரியாகி விட்டது. அத்தனையும் தப்புமயம்.

சேச்சே... செய்கிற வேலையில் கவனத்தை வையாமல் கண்டதையும் நினைத்துக் கொண்டிருந்தால் இதுதான் பலன்.

அத்தனையையும் கிழிந்து எறிந்துவிட்டு கவனத்தை சற்றும் சிதறவிடாமல் முழுமையாக வேலையில் பதித்து வேகமாகச் செயல்படலானாள் அவள்.

கார் ஓடத் தொடங்கியதுமே அருண்குமார் தன் ஆத்திரத்தை மறையாமல் வினோதாவிடம் காட்டினான்.

சகாயம் அங்கிளின் பேத்தியாகப் பிறந்து, அவர் வீட்டில் வளர்ந்து என்ன பிரயோஜனம்? அல்லது அவளது கான்வென்ட் கல்லூரிப் படிப்புக்கும்தான் என்ன பயன் இருக்கிறது. ஒருவர் மனம் நோகுமா என்று யோசித்துப் பேசத் தெரியவில்லையே!

''ஏன்? அப்படி என்ன பேசத் தெரியாமல் பேசிவிட்டேனாம்?'' என்றாள் அவள் சற்றும் கலங்காமல்.

''அனாதைப் பெண் என்று அவள் காது கேட்கச் சொல்லவில்லையா?''

''அதில் தப்பு என்ன இருக்கிறது? அவள் அனாதைப் பெண்தானே?'' என்றாள் அவள் குற்றக் குறுகுறுப்பு கொஞ்சமும் இல்லாமல்.

''வினோதா, அவள் அனாதையானது அவளது பிழை அல்ல'' என்றான் அவன் இழுத்துப்பிடித்த பொறுமையுடன்.



''பிழையோ இல்லையோ. அனாதை, அனாதை தான். இதைச் சொல்லுவதில் என்ன தப்பு? வக்கீல் புத்தியைக் காட்டிப் பெரிதாக வக்காலத்து வாங்க வந்து விட்டீர்களே.''

செய்தது தப்புதான் என்றாலும் அதை இவன் எப்படிச் சொல்லலாம் என்கிற கோபம் அவளுக்கு. அவனது தொழிலையே மட்டம் தட்டிப் பேசிவிட்டாள்.

அவனுக்கும் ஆத்திரம் வந்துவிட்டது. ''உண்மை என்றால் அதைச் சொல்லி விடலாமா? பட்டப்படிப்பில் மூன்று தரம் கோட்டை விட்டவள் நீ. அதற்காக உன்னை மட்டி, 'முட்டாள்' என்று அழைத்து விடலாமா?'' என்று கேட்டுவிட அவள் 'ஓ'வென்று கதறி அழத் தொடங்கினாள்.

ஒருவாறு அவளைச் சமாதானப்படுத்தி விமானமேற்றி அனுப்புமுன் அருண்குமாருக்குப் போதும் போதும் என்றாகிப் போயிற்று.

## 4

**ஞா**யிற்றுக்கிழமை தொடங்கும் வரை, தனக்குத் தானே விதித்துக் கொண்ட கட்டுப்பாட்டிலிருந்து தரங்கிணி சற்றும் மீறினாளில்லை.

அரும்பாடு படவேண்டியிருந்தது. உண்மைதான். ஆயினும் கொஞ்சம் அந்தப்பக்கம் சிந்தனை செல்லும் போலத் தோன்றினாலும் கூட உடனேயே வேறு எதையேனும் பற்றித் தீவிரமாக யோசித்து மனம் அருண்குமாரிட

மிருந்தும் வினோதாவிடமிருந்தும் விலகிவிடும்படி பார்த்துக் கொண்டாள்.

அதே தீவிரத்தில் இருந்தவளுக்கு, ஞாயிறன்று காலைகூட அவன் வரவை நினைக்கப் பிடிக்காமல் போயிற்று.

ஆனால் வார்த்தை மாறுவதும் அவளுக்குப் பழக்க மற்ற விஷயம். எனவே சற்று அதிகாலையிலேயே எழுந்து தன் ஞாயிற்றுக்கிழமை வேலைகளை முடித்துக் கொண்டு அவன் வரவுக்காகக் காத்திருந்தாள்.

அன்றைய தினத்தைப் பற்றி அவள் ஒரு திட்டமிட்டிருந்தாள். அருண்குமார் அவளை அழைத்துச் செல்லுகிற நேரம் முதுகாலைப்பொழுது - கிட்டத்தட்ட மதியம். எனவே காலை முடிகையில் உணவு வேலையாகிவிடும்.

எனவே அலுவலக நாட்களைப் போல ஓர் உணவுப் பொட்டலத்தையும் வாங்கிக் கைப்பையுள் வைத்துக் கொண்டாள் அவள்.

வேலை முடிந்து அவன் சென்றதும், ஏதாவது பார்க்கில் அமர்ந்து பசியாறி விட்டு, மியூசித்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்பது அன்றையப் பொழுது போக்கிற்காக அவள் தீட்டியிருந்த திட்டம்.

அருண்குமார் காரை நிறுத்திவிட்டு இறங்கும்போதே கைப்பையுடன் விடுதியை விட்டு வெளியே வந்துவிட்டாள் தரங்கிணி.

வினோதா, அவளுடைய தாயாரின் தாமதங்களுக்குப் பழக்கப்பட்டிருந்த அருண்குமாருக்கு இது இதமான ஆச்சரியமாக இருந்தது.



வரவேற்பாய் ஒரு முறுவலுடன் அவளுக்காகக் கார்க்கதவைத் திறந்து விட்டான்.

வினோதா போல முன்சீட்டில் அவன் அருகே அமர்ந்து செல்ல அவளுக்கு கொஞ்சம் மனம் கூசியபோதும் மறுத்தால் அனாவசிய பிகு போலத் தோன்றும் என்பதை உணர்ந்து பேசாமல் காரில் ஏறி அமர்ந்தாள்.

இதற்குமுன் சில தடவைகள் அன்பு இல்லத்தில் திடீரென்று நோய்வாய்ப்பட்டு குழந்தைகளை எடுத்துக் கொண்டு அவள் காரில் மருத்துவமனைவரை சென்றது உண்டு. ஆனால் அப்போதெல்லாம் நோயினால் வதைப்படும் குழந்தையைச் சமாதானப்படுத்துவதிலேயே அவளது கவனம் இருந்ததால் கார்ப் பயணத்தின் சுகத்தை அவளால் உணரக்கூடவில்லை.

இப்போதும், அன்று வினோதா உரிமையோடு அமர்ந்து சென்று இடத்தில் உட்கார்ந்திருக்கிறோம் என்ற நிலை அவளது சுகத்தை அழிக்கப் போதுமானதாக இருந்தது. முகத்தில் எந்தவித மாறுதலையும் காட்டிக் கொள்ளாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தாள்.

கார்ப் பயணத்தின் போது உம்மணாமுஞ்சியாய் இராமல் கூட இருப்போருக்குப் போரடிக்காமல் பேச்சுக் கொடுப்பது அருண்குமாரின் வழக்கம் போலும்.

எளிதாக அவன் பேச்சில் தரங்கிணியும் கலந்து கொள்ளும் விதமாகப் படிப்பு, அதை ஒட்டிய மற்ற துறைகள் பற்றிப் பேச்சுக் கொடுத்தான்.

'நேஷனல் சோஷியல் சர்வீஸ்' பற்றிப் பேச்சு வந்தது.

''உன்... உங்களுக்கு என்ன வேலை எங்கே கொடுத்தார்கள்?'' என்று சொல்லிவிட்டு, ''வயதில்

ரொம்பச் சின்னவளாய்த் தெரிந்தால் சட்டென்று 'நீ, உன்' என்று வாயில் வந்துவிடுகிறது. தயவு செய்து தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டான் அருண்குமார்.

''அதனால் பரவாயில்லை'' என்று கூறிவிட்டு அவனது கேள்விக்குரிய பதிலைச் சொன்னபோது அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ''எனக்கு என்.எஸ்.எஸ். சுக்கு என்று எங்கள் ஆசிரமத்துக்கே அனுப்பிவைத்து விட்டார்கள். நல்ல வேளையாக, அன்று இரண்டு பணியாட்களுக்கு உடம்பு சரியில்லாததால் அந்த வேலையைச் செய்துவிட்டுப் போனேன்'' என்று கூறவும் அவனும் நகைத்தான்.

''நாங்கள் படிக்கும்போது, என்.எஸ்.எஸ்.சுக்காகச் சென்ற இடம் இது'' என்று கையைக் காட்டினான் அவன்.

'செயின்ட் லூயிஸ் இன்ஸ்டிடியூட் ஃபார் பிளைண்ட்' என்று ஆங்கிலத்தில் எழுதி இருந்ததைப் படித்துவிட்டு வியப்புடன் அவனைத் திரும்பிப் பார்த்தாள் தரங்கிணி. ''இங்கே என்ன வேலை... அதாவது கண்தெரியாதால் பாடம் கற்றுக் கொடுப்பது, படிக்கச் சொல்வது என்று ஒன்றும் செய்ய முடியாதே...'' என்று கேட்டாள் தரங்கிணி.

''அது மாதிரி இல்லை. ஆனால் நிறையச் செய்யலாம். செய்வோம். முக்கியமாக அவர்களது உறவினர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுப்போம். ஸ்டாம்பு, கவர் எல்லாம் வாங்கி வைத்துக் கொண்டு அவர்கள் எங்கள் வருகைக்காகக் காத்திருப்பதைப் பார்க்கும்போது உள்ளூர வலிக்கும். ஏதாவது பாடங்களை உரக்க வாசித்தால் அவர்கள் 'பிரெயில்' எழுத்துக்களில் எழுதுவார்கள். அவர்களுக்குப் பரீட்சை சமயம் வந்து அவர்கள் சொல்லச் சொல்ல அதைப் பரீட்சைப் பேப்பரில் எழுதிக் கொடுப்போம். சில சமயங்களில் தப்பாகச் சொல்லும்போது, அது பிழை என்று தெரிந்தாலும் திருத்தாமல் அப்படியே எழுத நேரும்போது சங்கடமாக இருக்கும். ஆனால் அப்படியேதான் எழுதிக் கொடுத்தாக வேண்டும்...''



இதுபோன்ற விளக்கங்களை அவனிடம் சற்றும் எதிர்பார்த்திராத தரங்கிணி பிரமித்துப் போனாள்.

ஒரு திருப்பத்தில் திரும்பி, மெல்ல ஊர்ந்து கார் சற்றுத் துருப்பிடித்த ஒரு பெரிய கேட் அருகில் நிற்கவும் சற்றுநேரம் தரங்கிணி இறுகிப் போனாள்.

காரில் இருந்து இறங்கி, கதவைச் சாத்தி 'லாக்' செய்து கொண்டு திரும்பியவன் அவள் உள்ளேயே அமர்ந்து இருக்கவும் வியப்புடன் அவள் புறம் வந்து கதவைத் திறந்து விட்டு ''என்ன?'' என்று விசாரித்தான்.

''இந்த... இந்த வீடு எனக்குத் தெரியும்.'' என்றவளுக்குக் குரலே எழும்பவில்லை.

அருண்குமாரின் முகத்தில் ஐயம் படர்ந்தது.

மெல்ல இறங்கியவள், அதைக் கண்ணுற்று, ''மெய்யாகத்தான் சொல்லுகிறேன். இந்த கேட்டைத் திறந்து உள்ளே சென்றால் கொஞ்ச தூரம் தோட்டத்தில் நடக்க வேண்டும். உள்ளே அகலமான படிகளுடன் வராண்டா இருக்கும். அப்புறம் பெரிய ஹால்... ஹாலின் ஒருபுறமாய் ஊஞ்சல். பெரிய ஊஞ்சல் இருக்கும்...''

'உனக்கு எப்படித் தெரியும்?'' என்றான் அருண்குமார் ஆச்சரியத்துடன்.

சட்டெனத் தரங்கிணியின் முகம் இறுகியது.

"முன்னே, என் சின்ன வயதில் என் அம்மா ஒருதரம் என்னை இங்கே அழைத்து வந்தார்கள். அப்போது பார்த்தது.'' என்று உண்டாக்கிக் கொண்ட அலட்சியத்துடன் வெளியே இறங்கினாள்.

'கேட்'டைத் திறந்து கொண்டு இருவருமாக உள்ளே சென்றனர்.

கார் ஓடும்பாதை ஒன்று. இருமருங்கும் ஏதோ செடிகள் நட்டு வளர்த்திருப்பார்கள் போல. வரிசையாகக் காய்ந்து சருகாகி நின்றன. ஆனால் களைச்செடிகளும் கொடிகளும் கண்டபடி தழைத்து வளர்ந்திருந்தன.

வேர் ஊன்ற இடம் கொடுத்தால் தீமை வளர்ந்து விடும் என்பதா? தீமைக்கு வலு அதிகம் என்பதா? எண்ணமிட்டபடியே அருண்குமாரோடு நடந்த தரங்கிணி முன் வராந்தா படிகளை அடைந்ததும் சட்டென நின்றாள்.

இந்த இடம்தான் அம்மாவை யாரோ பிடித்துத் தள்ளிவிட அம்மா படிகளில் தடுமாறி விழுந்த இடம்... யாரோ என்ன? வீட்டை எழுதிவைத்த அருமைப்பாட்டனாராகத்தான் இருக்க வேண்டும்... அல்லது வேறு யாரும்... அருண் சொன்ன மாமன்மார் யாராவது இருக்கக் கூடுமோ?

தள்ளிவிட்டவரின் முகத்தை நினைவுகூற முயன்றும் தரங்கிணிக்கு நினைவு வர மறுத்தது. நாலு வயதுச் சிறுமிக்கு விழுந்துவிட்ட தாயிடம் அழுது கொண்டு ஓடுவதில் மனம் இருந்ததே தவிர தள்ளிவிட்ட ஆளைப் பற்றிய அக்கறை இருக்கவில்லை.

''என்ன?''

அருண்குமாரின் குரலில் சட்டென நடப்புக்கு வந்தாள் தரங்கிணி.



படியேறி முடித்திருந்த அவன், அவள் அசையாது அப்படியே நின்று விட்டதால் விவரம் கேட்பதை உணர்ந்து, "ஒன்றுமில்லை. சும்மா பார்த்தேன்.'' என்றாள் உணர்ச்சி துடைத்த முகத்துடன்.

அவளது அவலங்களை அடுத்தவரிடம் சொல்வானேன்?

ஹாலில் ஒருபுறமாய் அந்தப் பெரிய ஊஞ்சல் அப்படியே இருந்தது.

சற்று வயதான பெண்மணியின் தோளில் சாய்ந்து ஏதோ தாயார் பேசியதும், அந்த அம்மாள் ஏதோ சொன்னதும் பனிப்படலத்தின் பின்னுள்ள சிகரங்கள் போலத் தெளிவற்றுத் தோன்றின.

ஆனால் அதன்பின் அம்மா உற்சாகமாகச் சிரித்தபடி இந்த ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடியது தெளிவான காட்சியாகவே தெரிந்தது.

அவள் ஊஞ்சலை வெறிப்பதைக் காணவும், "இந்த ஊஞ்சலில் ஆடுவது உன் அம்மாவுக்கு மிகவும் பிரியமாம். ஓய்வு நேரங்களில் இதில் லேசாக ஆடியபடி ஏதாவது படிப்பார்களாம்... உணவு கொள்வது, பாடம் படிப்பது எல்லாம் இதில் அமர்ந்தபடிதான் என்று உன் தாத்தா சொன்னார். தோட்டமும் அவர்கள் மிகவும் விரும்பித் திட்டமிட்டு வளர்த்ததாம். வீட்டை அலங்கரிப்பதிலும் அவருக்கு ஆசை அதிகமாம். பொருத்தமான திரைகள், பூச்சாடியில் மலர்கள் என்று... மகள் ஆசையாக ஆடி ஓடி விளையாடிய இடம், அவரது வாரிசுக்காவது கொடுத்துவிட வேண்டும் என்று நினைத்து இந்த முடிவ செய்ததாக அவர் சொன்னார்'' என்று விவரித்தான் அருண்.

அவன் ஒவ்வோர் அறையாகத் திறந்து காட்டக் காட்டப் பார்த்துக்கொண்டே மவுனமாக அவனைத் தொடர்ந்தாள் அவள்.

வாய் பேசாதிருக்க மனம் வேலை செய்து கொண்டே இருந்தது.

பூசையறையைப் பார்க்கும்போது, இங்கே அம்மா நின்று இரு கண்மூடி இறைவனைத் தொழுதிருப்பார்கள்; தானே திட்டமிட்டு வளர்த்த தோட்டத்திலிருந்து தன் கையாலேயே மலர் கொய்துவந்து சுவாமி பீடங்களுக்குச் சூட்டியிருப்பார்கள் என்று எண்ணினாள்.

குளியல் அறையைப் பார்த்தால் இது அம்மா குளித்த இடம். சந்தன சோப்பின் நுரையோடு ஷவரின் அடியில் நின்று குளித்திருப்பார்கள் என்று நினைத்தாள்.

படுக்கை அறைகளைப் பார்க்கையில், இதில் ஏதோ ஓர் அறையில் அம்மா அலுப்புதீரத் துயின்றிருப்பார்கள் என்று தோன்றியது.

மாடிப்படியைப் பார்த்தால் அன்னை ஒயிலாக இறங்கி வந்த படி என்று எண்ணினாள். வீடு முழுவதும் அவளுடைய தாயே நிறைந்திருப்பது போலத் தரங்கிணிக்குத் தோன்றியது. அவளுடைய பாட்டனாருக்கும் அப்படித்தான் தோன்றியிருக்குமோ? அதனால்தான் இப்படிச் செய்தார் என்று அருண் கூடச் சொல்லவில்லையா?

ஆனால் கழுத்தை வெட்டிவிட்டுக் காயத்துக்கு மருந்து போடுவதுபோல மகளைப் பட்டினியால் சாக விட்டு விட்டு, மகளுடைய மகளுக்கு வீட்டைத் தர வேண்டுமா? அப்படி அவர் தருவதை - உறுத்தும் மனச்சாட்சியின் வாயை மூடுவதற்காகவே அவர் இதைச் செய்திருக்கலாம். அப்படி அவர் தருவதை அவள் ஏற்றுக் கொள்ள வேண்டுமா?



ஆனால்...

அவளுடைய தாயார், அவள் அறிந்த ஒரே ஓர் உறவோடு சம்பந்தப்பட்ட ஒரே இடம் இது...

அவ்வப்போது அருண்குமாரின் பார்வை தன் முகத்தில் பதிவதை உணர்ந்ததால் உள்ளே குமுறும் உணர்ச்சிகளை முடிந்த அளவு வெளிக்காட்டாமல் மறைக்கவே தரங்கிணி முயன்றாள். திடுமெனத் தாக்கிய சில வினாடி நெகிழ்வுதான் தவிர மற்றபடி அதில் வெற்றியும் கண்டாள்.

அருண்குமாரும் சும்மா ஒன்றும் இந்தச் சிறு வயதிற்குள்ளாகக் கெட்டிக்காரன் என்று பெயர் எடுத்துவிடவில்லை. ஒரு பார்வை, ஒரு பேச்சு, ஓர் அசைவிலிருந்தே ஆளைக் கணித்துப் பிடித்து விடுவான் என்பது சகாயம் அடிக்கடி சூட்டும் புகழ்மாலை. அது தவறு என்றும் சொல்வதற்கில்லை.

இப்போதும் தரங்கிணியின் சில முகபாவனைகளை அவள் மறைக்குமுன்பாக அவன் இனம் கண்டு கொண்டு விட்டிருந்தான்.

இந்த வீட்டில் அவளது வேர்கள் இருக்கின்றன. இந்த வீட்டோடு அவளுக்குச் சொந்த பந்தங்கள் இருக்கின்றன; இந்த வீட்டின் மீது அவளுக்கு உரிமை இருக்கிறது என்று எண்ணுகிற அளவுக்குத் தரங்கிணி வந்து விட்டாள் என்பதை அவனும் உணர்ந்து கொண்டு விட்டான்.

அதுவே அவன் விரும்பியதும்.

ஏனெனில், இப்படி ஆனால் மட்டும்தான் சகாயம் விரும்பிய வேறுவித அவசரத்துக்கு இந்த வீடு பயன்படுத்தக்கூடும் என்பதை அவன் நன்றாக அறிந்திருந்தான்.

A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark


# 5

வீடு முழுவதையும் பார்வையிட்டு முடிந்தபின் தோட்டத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

மரங்களில் இருந்து விழுந்த இலைகளும் சருகுகளும் அங்குமிங்கும் கிடந்தன.

ஒரு பெரிய மாமரத்தின் அடியில் கிடந்த கல்பெஞ்சில் மீதி எந்த தூசியைக் கையோடு கொண்டு வந்திருந்த சிறு டவலால் தட்டிவிட்டு அவளை அங்கே அமரச் சொன்னான் அருண்குமார்.

''உட்கார்ந்திருங்கள். காரிலிருந்து சாப்பாடு எடுத்து வருகிறேன். இருவருமாகச் சாப்பிடலாம்'' என்று அவன் கூறவும் அவளது விழிகள் வியப்பால் விரிந்தன.

''சாப்பாடா?''

''பின்னே? மணி என்ன தெரியுமா? ஒன்றாகப் போகிறது. இந்த நேரத்தில் உங்களைப் பட்டினியாய்த் திருப்பி அனுப்புவேன் என்றா நினைத்தீர்கள்?'' என்று அவன் கேட்கவும் அவள் முகம் சட்டெனக் கன்றிச் சிவந்து போயிற்று.

ஓர் ஓசிச் சாப்பாட்டுக்காகத்தான் கிளம்புகிற நேரத்தை இவ்வளவு பின்னே தள்ளினான் என்று நினைத்திருப்பாளோ?

''வ...வந்து அவசியமில்லை. நா...ன் நான் எப்போதும் லேட்டாகத்தான்... ஞாயிற்றுக்கிழமைகளில் மற்ற வேலை முடித்து விட்டுச் சாப்பிட மிகவும் தாமதம் ஆகிவிடும்.... அதனால் என்னை ஏதாவது பஸ் நிறுத்தத்தில் விட்டு விட்டால் நான் விடுதிக்குப் போய் வழக்கம்



போலச் சாப்பிட்டுக் கொள்வேன்'' என்று திக்கித் திணறிக் கூறி முடித்தாள்.

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன் முகத்தில் லேசான புன்னகை அரும்பியது. ''நீங்கள் மகா மட்டமான பொய் சொல்லி என்று நினைக்கிறேன், தரங்கிணி'' என்றவன், அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாதிருக்கவும்,

''பாரம்மா, நீ ஓசியில் சாப்பிடுவதற்காகத் திட்டமிட்டாய் என்று நான் ஒரு போதும் நினைக்க மாட்டேன். நீ அப்படிப்பட்டவள் இல்லை என்பது எனக்கு நன்றாகவே தெரியும்'' என்றான் குரலும் முகமும் மென்மையுற.

தரங்கிணி அப்போதும் சமாதானமடையவில்லை. ''எப்படித் தெரியும்?'' என்றாள் குரலில் ஐயத்துடன்.

''ஓசிக்குப் பறக்கிறவள் என்றால் பூர்வீகச் சொத்து என்ற ஒரு வார்த்தையில் என் முதல் கடிதம் கண்ட மறுநாளே என் அலுவலகத்துக்கு வந்து நின்றிருக்க மாட்டாயா?... ஓ, சாரி, நின்றிருக்க மாட்டீர்களா?'' என்று அவன் ஆணித்தரமாகக் கேட்கவும் அவள் முகம் ஒருவாறு தெளிந்தது.

ஒரு பெருமூச்சுடன், ''நான்கூடக் கொஞ்சம் - வந்து சாரி, எனக்கு மட்டும் என்று எடுத்து வந்தேன். அதையும் பகிர்ந்து கொள்ளலாமா?'' என்று சன்னக் குரலில் வினவியபடியே உணவுப் பொட்டலத்தைக் கைப்பையில் இருந்து எடுத்து வெளியே வைத்தாள்.

பாக்கெட்டைப் பார்த்துவிட்டு, ''இதுதான் முழு மதிய உணவுமா? இவ்வளவு கொஞ்சமாகத்தான் சாப்பிடுவீர்களா? இப்போது தெரிந்தது நீங்கள் ஒல்லியாக இருப்பதன் ரகசியம். பொய்யோ எனும் இடையாள் என்று கம்பர் சொன்னது போல இவ்வளவு மெல்லிய

இடை எப்படி உனக்கு வாய்த்தது என்று இனிமேல் ஆச்சரியப்பட மாட்டேன்'' என்று கூறியபடியே காரை நோக்கி நடந்தான் அவன்.

உச்சி குளிர்ந்து போயிற்று அவளுக்கு. பொய்யோ எனும் இடையாளா? அவ்வளவு சின்னதாகவா அவளது இடுப்பு இருக்கிறது? விடுதிக்குப் போனபிறகு ஹால் கண்ணாடியில் பார்க்க வேண்டும்....

மலர்ந்த முகத்துடன் அருண்குமாரின் வருகைக்கா கக் காத்திருந்தாள் தரங்கிணி.

அவன் கொணர்ந்த பெரிய பிரம்புக் கூடையைப் பார்த்ததும் அவள் ஆச்சரியப்பட்டுப் போனாள்.

ஃப்ரைட் ரைஸ், பீட்சா, சான்ட்விச் என்று விதம்வித மாய் அவன் பரப்பவும், மனதால் கணக்கிட்டு, இதில் பாதி என்றாலும் வழக்கமான உணவு இந்த அளவு. என்றால், அவன் உடம்பைக் கச்சிதமாகவே வைத்திருக்கி றான் என்று உள்ளூர மெச்சிக் கொண்டாள் தரங்கிணி.

ஆனால் அவள் மனதைப் படித்தவன் போல, ''எல்லாம் வியர்வை வடிய வடியச் செய்கிற உடற் பயிற்சி'' என்று அவன் விளக்கவும் சட்டென அவள் முகம் சிவந்து போயிற்று.

'ரூஜ்' தடவாமலே முகம் சிவப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது என்று ரசித்தவன் சட்டெனத் தலையைக் குலுக்கிக் கொண்டான்.

அவளுக்கு ஒரு பேப்பர் தட்டில் உணவு வகைகளை எடுத்து வைத்தபடி, ''அசைவம் கூடாது என்று இல் லையே?'' என்று விசாரித்தான்.

''ஊஹூம். எங்கள் ஆசிரமத்தில் பொதுவாகச் சைவ உணவுதான் என்றாலும், கோழிப் பண்ணை முதலாளி ஒருவர் அவ்வப்போது நிறைய முட்டை அனுப்புவார்.



ஏதாவது செய்து தருவார்கள். அய்யோ, எனக்கு இவ்வளவு வேண்டாம். வயிறு வெடித்துவிடும்'' என்று அவன் நீட்டிய தட்டில் இருந்து பலவற்றை எடுத்து உள்ளேயே வைத்தாள்.

உண்ணப் போகும் சமயம், ''எங்கே உங்கள் பங்கு?'' என்று கேட்டு, அவள் கொண்டு வந்திருந்த பொட்டலத்தைப் பிரித்து அதில் இருந்த புளிசாதத்தில் பாதியைத் தன் தட்டில் எடுத்து வைத்துக் கொண்டு உண்டு பார்த்தான் அருண்குமார்.

''ஆகா! என்ன ருசி! தரங்கிணி, உனக்குத்தான் விடுதியில் அடிக்கடி இது கிடைக்குமே. இந்தப் புளிசாதம் முழுவதையும் நானே எடுத்துக் கொள்ளட்டுமா?'' என்று கேட்டு அவன் உண்டது அவளது மனதுக்கு மிகவும் இதமாக இருந்தது.

கடைசியாக ஃப்ரூட் சாலட்டுடன் உணவை முடித்த போது இருவருக்குமே வயிறும் மனமும் நிறைந்திருந்தன. உணவு காலியான சாமான்களை மீண்டும் கூடையில் அடுக்கிவிட்டுச் சற்று நேரம் மர நிழலில் அமைதியாக உட்கார்ந்திருந்தனர்.

அம்மா கூட இந்த பெஞ்சில் எத்தனை தடவை இதுபோலத் திருப்தியோடு உட்கார்ந்திருந்தார்களோ என்ற எண்ணம் தோன்றிய மாத்திரத்தில் அந்த பெஞ்ச்சை நெஞ்சமுந்த இறுகக்கட்டிக் கொள்ள வேண்டும் போல வேகம் உண்டாகவும் சட்டென எழுந்தாள் தரங்கிணி.

இவன் முன்னிலையில் எந்த அசட்டுத்தனமும் செய்து விடக்கூடாது!

அவனோடு கூடவே எழுந்தபடி, என்ன, இப்போது வீடு வேண்டுமா வேண்டாமா என்று கேலியாகப் பேச வாயெடுத்த அருண், மாற்றி, ''மீண்டும் அடுத்த வாரம்

இதேபோலச் சந்திக்கலாமா?'' என்று வினவினான்.

அவளது பார்வைக்குப் பதிலாக, ''வீடு பற்றி மேற்கொண்டு பேசவேண்டும் அல்லவா?'' என்று விளக்கம் கொடுத்தான்.

அவசரமாகத் தலையாட்டி விட்ட பிறகு தரங்கிணிக்கு அந்த வினோதாவின் நினைவு வந்து உறுத்தத் தொடங்கியது. ஒரு ஞாயிறு மதிய உணவுக்கு வரவில்லை என்பதற்கே அப்படி ஆத்திரப்பட்டாள்!

''வந்து... உங்களுக்கு ஞாயிறன்று வேறு வேலை இருந்தால் இன்னொரு நாள் வைத்துக் கொள்ளலாம், மிஸ்டர் அருண்குமார்'' என்றாள் மெதுவாக.

ஒரு கணம் விழி இடுங்க அவளை நோக்கிய அருணின் முகம் கருத்தது. ''அப்படி வேறுவேலை இருந்திருந்தால் உங்களை அழைத்திருக்கவே மாட்டேன், மிஸ் தரங்கிணி.''

திடுமென யாரோ போல முழு அன்னியனாகத் தூர நின்று அவன் பேசிய விதம் மனதை வருத்த, அதற்கு மேல் மறுத்துக் கூறாமல் வாயை மூடிக் கொண்டாள் அவள்.

அந்த வாரம் முழுதுமே தரங்கிணிக்கு அந்த வீட்டைப் பற்றியே நினைவாக இருந்தது.

அவளுடைய தாயார், அழகாகப் பராமரிக்கப்பட்ட அந்த வீட்டுத் தோட்டத்தில் சினிமாவில் போல ஆடிப்பாடுவது போலக் உருவகித்துப் பார்த்துவிட்டு சே, என்ன முட்டாள்தனம் என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

சினிமாக்களில் இந்தத் திடீர்ப் பாட்டுகளை அவளால் ஒத்துக் கொள்ளவே முடியாது. இப்போது அவளே அதுபோலக் கற்பனை செய்வதா?

ஆனால் அந்தமாதிரி கற்பனை நின்று போயிற்றே



தவிர, வீடு முழுவதும் ஒவ்வோர் இடத்திலுமாகத் தாயின் பிரசன்னத்தை நினைத்துப் பாராமல் அவளால் இருக்க முடியவில்லை.

மகளை நினைத்து, அவளுடைய வாரிசுக்கேனும் போய்ச் சேரட்டும் என்று இவ்வளவு பெரிய வீட்டை எழுதி வைப்பது என்றால் அந்த... தாத்தா என்று உரிமையோடு நினைக்க இன்னமும் அவளுக்கு மனம் வரவில்லை. எனவே அந்தப் 'பெரியவரு'க்கும் மகள் மீது பாசம் இருந்து தானே இருக்க வேண்டும் என்று யோசித்தாள்.

அந்தப் பாசம் நடுவில் பிரிந்து போய்விட என்ன நடந்திருக்கக் கூடும்?

அவளுடைய தந்தைக்கும் அம்மாவுடைய தந்தைக்கும் ஏதேனும் விரோதம் இருந்திருக்குமா?

அதனால் அவ்வளவு ஆனந்தமாய் வசித்த வீட்டை விட்டு அம்மா வெளியேற நேர்ந்திருக்குமா?

அவ்வளவு பெரிய வீட்டில் பழகிவிட்டு ஏதாவது சந்துபொந்து மாதிரி இடத்தில் வாழ நேர்ந்திருந்தால் அப்போது அம்மாவுக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்திருக்கும்?

சுற்றிச் சுற்றி அவள் மனம் அந்த வீட்டிலேயே வந்து நின்றவிதம் அவளுக்கு வியப்பளித்தது.

நிம்மதியும் அமைதியுமாக வாழ்ந்து கொண்டு இருப்பதாக எண்ணினாளே! அது மெய்யானால் இத்தனை சலனம் ஏன் உண்டாக வேண்டும்?

ஒருவேளை அவளது உள்மனம் தன் வேர்களைத் தேடிக் கொண்டேதான் இருந்ததோ?

வெறுமனே வீட்டைப் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டும் இருந்து விடவில்லை அவள். அதைக்

காட்டவென்று அவளைக் கூட்டிச் சென்றவன் பற்றியும் நினைவு வரத்தான் செய்தது.

பொய்யோவெனும் இடை என்றானே. இவ்வளவு மெல்லிய இடையா என்று ஆச்சரியப்பட்டதாகச் சொன்னானே!

தினமும் செல்லும் போதும் வரும்போதும் ஹாலில் இருந்த பெரிய கண்ணாடியில் தென்பட்ட இடையழகு வேறு திரும்பத் திரும்ப அதைச் சொன்னவனைப் பற்றிய நினைவுகளைத் தூண்டிவிட்டது.

அவனது உயரமும், கட்டுக்கோப்பான உடல் அமைப்பும் கம்பீரமான தோற்றமும் தெளிவான பேச்சும் சட்டென அடுத்தவர் மனம் அறிந்து பேசும் விதமும்... எதிலுமே அவளால் குறைகாண முடியவில்லை.

அவனது முதல் கடிதத்தைப் படித்துவிட்டு கர்வி என்று எண்ணினாளே, ஆனால் அவன் பேச்சில் ஒரு தன்னம்பிக்கை இருந்ததே தவிரக் கர்வம் காணப்படவில்லையே.

சும்மா சும்மா அருண்குமாரையே நினைத்துக் கொண்டு இருப்பதில் ஒரு சுகம் இருந்தபோதும் கூடவே ஓர் ஏக்கம். ஏதோ கிட்டாது போன மாதிரியான வேதனை உண்டாவதை விரைவிலேயே உணர்ந்து கொண்டாள் தரங்கிணி.

அதன் காரணம் புரிபடாதபோதும், இந்த ஏக்கத்தை வளரவிடுவது நல்லதல்ல என்கிற அளவு தெரிந்தது. பிடிவாதமாய் மனதை வேறு புறம் திருப்பினாள்.

அவனோடு அன்று கூட வந்தாளே அந்த வினோதா. அவளது ஆடை அணிகலன்களைப் பற்றி ஆராய்ந்தாள்.

அழகிதான். அந்த அழகை எடுத்துக் காட்டும் விதமாக, முடிந்த அளவு மறைக்காத உடை அலங்காரம்.



மறைப்பதிலும் அழகு இருப்பதைக் காட்டிவிட வேண்டும் போலத் தோன்றவும் மாலை வீடு திரும்பும்போது கடைத் தெருப்பக்கம் சென்றாள்.

அவளாக வாங்கியிருந்த சேலைகள் எல்லாமே அழகானவைதான் என்றாலும் இன்னும் கொஞ்சம் ஏதோ வேண்டும் போல் தோன்றவும் சற்றே அதிக விலையில் உள்ளவற்றை ஆராய்ந்து, பிங்க் கலரில் பொடிப் பொடியாய் வெள்ளைப் பூக்கள் அமைந்த ஒரு 'கோட்டா' சேலையை, அதற்குப் பொருத்தமான உள்பாவாடை, ரவிக்கையோடு வாங்கிக் கொண்டு வந்தாள்.

அதிக விலைச் சேலை என்று உள்ளூர உறுத்திய மனதை 'நான் என்ன காஞ்சிப்பட்டா வாங்கிவிட்டேன், அதிக விலை என்று சொல்ல?' என்று அதட்டி சமாதானம் செய்தாள்.

இன்னமும் வினோதாபோல உதட்டு, நகச் சாயங்களை வாங்கச் சென்று விட்டு, எப்படியும் அவளது நிலைக்கு இது நிச்சயமாய் அதிகச் செலவுதான் என்று முடிவு செய்து எதையும் வாங்காமலே திரும்பி வந்தாள்.

ஒரு காலத்தில்... இன்னும் நிறையச் சம்பாதிக்கும் போது பார்த்துக் கொள்ளலாம்.

ஞாயிறன்று அவளை அழைத்துச் செல்ல வந்த அருண்குமார் விழிகள் பளபளக்க ''பியூ...ட்டிஃபுல்?'' என்றபோது, சேலையின் அதிகவிலை, அதை எழிலுற உடுத்திக் கொள்ளச் செலவான நேரம் எல்லாம் நியாயப் படுத்தப்பட்டு விட்டதாக உணர்ந்தாள் தரங்கிணி.

அன்றும் ஒருதரம் வீட்டைச் சுற்றிக் காட்டினான் அருண்குமார்.

சரியான பராமரிப்பு இல்லாததால் அங்கங்கே காணப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினான்.

பல ஆண்டுகளாக வெள்ளையடிக்கப்படாதிருந்த சுவர்கள், விஷமத்தனமான கல்லெறி, அல்லது விளையாட்டுச் சிறார்களின் பந்தெறிகளினால் விரிசலும் உடைசலுமாயிருந்த சன்னல் கண்ணாடிகள்; காலப் போக்கினால் சிதிலமாயிருந்த மரச்சட்டங்கள்; இவற்றைச் சீர் செய்வதற்காகத் தேவைப்படும் பல ஆயிரங்கள்!

ஆனால் ரீங்காரமாய்க் காதில் விழுந்த அவனது குரலை மட்டும் ரசித்தபடி தன் கனவுகளிலேயே ஒவ்வோர் இடத்திலும் தாயாரின் பழைய காலத்தை உருவகித்துப் பார்த்தபடியே அதிலேயே அமிழ்ந்தவளாக நடந்து கொண்டிருந்தாள் தரங்கிணி.

முந்தைய ஞாயிறு போலவே தோட்டத்தில் அமர்ந்து உணவையும் பகிர்ந்து உண்டனர்.

தூசுதும்பு இல்லாத, சீராகப் பாதுகாக்கப்பட்ட ஒரு தோட்டத்தையும் அதில் தாயாரையும் கற்பனை செய்து கொண்டிருந்த தரங்கிணி கேட்டாள். ''எவ்வளவு காலமாக இந்த வீடு இப்படிப் பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது?''

''உன் தாத்தா இறந்தபின் ஓர் ஆண்டுகாலமாக, அதற்கு முன்பும் வீட்டை அவர்களுக்கு இல்லை என்று ஆனபின் உன் மாமன்மார் யாரும் இந்த வீட்டின் மேல் அக்கறை காட்டவில்லை. வயதும், நோயுமாக உன் தாத்தாவுக்கும் எதையும் எடுத்துச் செய்ய முடியவில்லை.''

''அப்படியானால் நான் அவர்களுக்கு வேண்டாத உறவு...?''

''அவர்கள் நிலையில் உன்னை வைத்து யோசித்துப் பார். நீயும் அப்படித்தான் நினைப்பாய்.''

''ஆனாலும் ரத்தம்... பரவாயில்லை. ஆனால் ஏன்



இப்படி? என்ன நடந்தது? எதற்காக அம்மாவை அப்படி ஒதுக்கி விட்டார்கள்?'' என்று விசாரித்தாள் தரங்கிணி. உள்ளூர ஒரு படபடப்பு. பெற்றோரைப் பற்றி இதுவரை அறியாத விவரங்கள். கேளாமலேயே விட்டிருக்கலாமோ என்று கூட ஒரு கணம் தோன்றிவிட்டது.

தோளைக் குலுக்கினான் அருண்குமார். ''மாமூல் கதைதான்'' தகுதிக்கு மிகவும் குறைவான இடத்தில் காதல் உன் தாயாருக்கு. தந்தை மறுக்கவே வீட்டை விட்டு வெளியேறி விட்டார்கள். இடையில் ஒருதரம் உதவி தேடி வந்தார்கள் போல. உன் தாத்தா மனம் இளகாமல் விரட்டிவிட்டார். இறந்துபோன விஷயம் சில ஆண்டுகளுக்கு முன்தான் தெரியும். உன்னைத் தேடியும் அவருக்குக் கண்டுபிடிக்க முடியவில்லை. உயில் எழுதி, அதை நிறைவேற்றும் பொறுப்பை எங்களிடம் கொடுத்தார். மற்றது உனக்குத் தெரியும்.''

ஒருசிறு தயக்கத்தின் பின், மனமற்றவன் போலத் தொடர்ந்தான் அருண். கடைசிக் காலத்தில் மகளை எண்ணி மிகவும் வருந்தினார் ராமநாதன். உன்னையேயும் பார்த்து உன்னிடமாவது மன்னிப்புப் பெறுவதற்காக எவ்வளவோ செலவு செய்து தேடியும் அவரால் கண்டுபிடிக்க முடியாமலேயே போய்விட்டது. பாவம்...''

கடைசிவரை இந்தத் தாத்தா வில்லனாகவே இருந்துவிட்டுப் போயிருக்கலாம். இப்போது போய் அவருக்காகவும் இந்த வேதனைப்பட நேர்ந்திராது. ஆனால் இந்த வீடு...

அழுக்கும் மழைக்**காயப்** பாசியின் காய்வுமாகக் கறுத்திருந்த சுவர்களை வெறித்துப் பார்த்தாள் தரங்கிணி.

அவளது பார்வையைத் தவறாகப் புரிந்து, ''எப்படியும் இந்த வீட்டை நன்றாக பராமரிப்புச் செய்து பழைய

நிலைக்குக் கொண்டு வருவதற்குக் குறைந்தது ஐம்பது ஆயிரம் ரூபாய் தேவைப்படும்.'' என்றான் அருண்குமார்.

அந்தத் தொகையின் மதிப்பை அவள் ஜீரணிக்க நேரம் கொடுத்து, ''அதனால் அவ்வளவு பணத்தை இதில் செலவு, செய்வதை விட இதை லாபகரமாக விற்றுவிடுவது மேல்'' என்றான் அருண்குமார்.

திகைப்புற்று விழித்தாள் தரங்கிணி.

# 6

அவளை வலை போட்டுத் தேடிக் கண்டு பிடித்து, ஒதுங்கிச் சென்றவளை விடாமல் பிடித்து இழுத்து வந்து வீட்டைப் பெற்றுக் கொள்ளச் சொன்னவன், வீடு கைவந்து சேருமுன் விற்கச் சொல்கிறானே! ஒருவேளை அவள் காதுகளில் தான் எதுவும் தவறாக விழுந்தனவா?

அவளது திகைத்த பார்வையில் அவன் என்ன கண்டானோ? சற்றுத் தயங்கி, ''பராமரிப்பு இல்லாத இந்த நிலையிலும் இந்த வீட்டின் மதிப்பு என்ன தெரியுமா, தரங்கிணி?'' என்று கேட்டான் அருண்குமார்.

ஓர் ஆழ்ந்த மூச்சை எடுத்து வெளியிட்டவள், ''என்னைப் பொறுத்தவரையில் இந்த வீட்டுக்கு விலை மதிப்பே கிடையாதே'' என்றாள்.

''அப்படியென்றால்?''

''என் அம்மா பிறந்து, வளர்ந்து, விளையாடிய இடம் இது. ஆயிரம், பத்தாயிரம், லட்சம் கோடி பெறும்!'' என்றாள் கண்களும் முகமும் பிரகாசிக்க.



ஒருகணம் பேசாதிருந்தான் அருண். ''கனவுலக வாழ்க்கைக்கு இது சரி. ஆனால் இது நடப்புக்கு ஒத்துவராது, தரங்கிணி'' என்றான் குரலில் லேசான கண்டிப்புடன்.

அவள் பேசாதிருக்கவும் அவனே தொடர்ந்தான். ''சில விவரங்களை அறிந்து கொண்டால் முடிவு செய்வது உனக்கு எளிதாக இருக்கக் கூடும். இந்த வீடு இருக்கும் பகுதி பெரிய பணக்காரர்கள் வாழும் பகுதி என்பதால் இந்த மூன்று மனை நிலம் மட்டுமே நாற்பத்தைந்து லட்சம் பெறும். கதவு, சன்னல்கள் எல்லாம் பழைய கால பர்மா தேக்கு மரத்தால் ஆனவை. சேதம் ஆகாமல் பெயர்த்து எடுத்து விற்றால் அதுவே சில லட்சங்களை கொண்டுவரும். உள்ளிருக்கும் ரோஸ்வுட் அலமாரி, மேசைகள் சோஃபா எல்லாம் விற்றால்...''

''ஷட் அப்!'' என்ற சீறலில் அவன் பேச்சு நின்றது.

ஒரு கணம் திகைத்துப் பேச்சை நிறுத்தியவன், முகம் ஜிவ்வென்று கன்றிச் சிவக்க, ''யாரைச் சொன்னாய்?'' என்று பதிலுக்குச் சீறினான்.

''சற்றுமுன் என்னிடம் பேசிக் கொண்டு இருந்தவரைத்தான் சொன்னேன். மற்றபடி தெருவில் போகிறவர்கள் வருகிறவர்களை வாயைமூடச் சொன்னேன் என்று நினைத்தீர்களோ?'' என்று அலட்சியமாகத் தலையைச் சிலுப்பினாள் தரங்கிணி.

அடங்கிய கோபத்துடன், ''ஏன்?'' என்று கேட்டான் அவன்.

''என் அம்மா வாழ்ந்த இடத்தை உடைப்பதா? அப்படிச் சொல்ல உங்களுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்?'' என்றாள் அவள் சினம் அடங்காமல்.

''யதார்த்தமான உண்மையைச் சொல்லத் தனியாகத் தைரியம் வேண்டுமா?''

''என்ன யதார்த்தம்? மண்ணாங்கட்டி யதார்த்தம்! பாசம், அன்பு என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?''

''நீ சொல்லுகிற மாதிரியே எல்லோரும் நினைத்தால் ஆதிமனிதனின் குகையிலேயே வசித்துக் கொண்டு இருக்க வேண்டியதுதான். அத்தோடு உன் பாசமும் அன்பும் இந்த வீட்டைப் பராமரிக்கக் கூடுமா? அதற்குப் பணம் அல்லவா வேண்டும்? அதற்கு என்ன செய்வது என்று யோசித்தாயா?''

''நானும் சம்பாதிக்கிறேன்; சேமிக்கிறேன். அது தெரியுமா? உங்களுக்கு?''

திருப்பிக் கொடுக்கவேண்டும் என்கிற ஆசையில் சொல்லிவிட்ட போதும் தன் வருமானம் போதாதே என்ற எண்ணம் அவளை உறுத்தியது.

அதையே அவனும் சொன்னான். ''என்ன பணம்? உன் அகர்வால் கம்பெனி வேலையில் வருகிற சம்பளம் தானே? இந்த வீட்டைப் பராமரிக்க எவ்வளவு செலவா தும் என்று கொஞ்சமேனும் உனக்கு விவரம் தெரியுமா? உன் சம்பளம் முழுவதுமே கடலில் கரைத்த பெருங்காய மாய் ஒன்றுமில்லாமல் போய்விடும். அப்புறம் உணவுக்கு என்ன செய்வாய்? இந்த மாதிரிப் புதுப் புதுச் சேலைக ளுக்கு என்ன செய்வாய்? அதனால்தான் சொல்லுகிறேன் கேட்டுக் கொள். ஒரு நல்ல ரியல் எஸ்டேட் கம்பெனிக்கு இந்த இடத்தை விற்றால் குறைந்தது ஐம்பது லட்சம் பெறலாம். கூடவே இங்கே அவர்கள் கட்டும் ஃப்ளாட்டி லும் நீ வசிப்பதற்கு ஒன்று, உனக்கே சொந்தமாகத் தருவார்கள்... அவர்கள் தரும் பணத்தை டெப்பாசிட்



செய்து நிறைய வட்டி பெறலாம். அவர்கள் தரும் ஃப்ளாட்டில் வசதியோடு வாழலாம்...''

அவனை நேராக நோக்கி, ''இந்த வீட்டை என்னிடம் சேர்ப்பிப்பதில் உங்களுக்கு என்ன லாபம்?'' என்று விசாரித்தாள் தரங்கிணி.

''ஏன்? லாபம் தான். உன்னைக் கண்டுபிடித்து இந்த வீட்டை உன்னிடம் ஒப்படைப்பதற்காகக் கம்பெனிக்கு உன் தாத்தா பணம் தந்திருக்கிறார்.''

''ஓகே! ஒருவேளை என்னைக் கண்டுபிடிக்க முடியாமலேயே போய் விட்டது என்று வைத்துக் கொள்வோம். அல்லது நான் இந்த வீட்டை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் என்ன ஆகும்?''

அவளை ஒருதரம் நோக்கிவிட்டு அவன் சொன்னான். ''பத்திரிகையில் விளம்பரம் போட்டு, இந்த வீட்டைப் பொது ஏலம் போட்டு அந்த விற்பனையில் வரும் பணத்தை ராமகிருஷ்ணமடம் போலச் சில தர்ம ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கும்படி உயிலில் இருக்கிறது.''

''நினைத்தேன்'' என்றாள் தரங்கிணி ஒரு கசந்த முறுவலுடன்.

''என்ன நினைத்தாய்?'' என்றான் அவன் இமை இடுங்க அவளை நோக்கி.

''சோழியன் குடுமி! சோழியன் குடுமி ஆடுவது பற்றி நான் ஏற்கனவே படித்திருக்கிறேன். பொது ஏலத்தில் இந்த வீட்டை விற்க நேர்ந்தால் வாங்குகிறவர்களிடமிருந்து நீங்கள் ஏதும் பெற முடியாது. அதனால் பிரம்மப்பிரயத்தனம் செய்து என்னைக் கண்டுபிடித்து, என்னிடம் வீட்டைக் கொடுப்பது போலக் கொடுத்து என் மூலமாகவே விற்க வைத்து... அந்த 'ரியல் எஸ்டேட்'

கம்பெனியிடம் பெரும் பணம் பெற்றுக் கொள்வீர்கள் தானே? அந்தத் தரகுப் பணத்துக்காகத்தானே விற்கச் சொல்லுகிறீர்கள்?''

''நீ... நீ...'' என்று முகம் சிவக்கப் பேசத் தொடங்கிய அருண் சட்டென எழுந்தான். ''வா. உன்னை விடுதியில் கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன். அங்கே தனிமையில் இருந்து நன்றாக யோசித்துப்பார். எது நல்லது என்று உனக்கே புரியும்.''

எழுந்தவன் நில்லாமல் சென்று வீட்டை மீண்டும் பூட்டிக் கொண்டு காரை நோக்கிச் செல்லவும் வேறுவழியின்றி உள்ளூர வேதனையுடன் அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

அவள் பேசியது அதிகப்படியோ? அவள் தவறாகப் பேசினாள் என்றால் அவன் அதை மறுத்திருக்கலாமே?

அவன் மறுக்காதது மட்டுமல்ல. எந்தப் பேச்சுமே பேசவும் இல்லை. என்னவோ குப்பை வாரி குப்பை கொட்டி விட்டுப் போவது போல விடுதியில் அவளை இறக்கிவிட்டவன் திரும்பிப் பாராமல் வேகமாகக் காரைக் கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டான்.

கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்ற தரங்கிணிக்கு முட்டி மோதிக் கொண்டு அழுகை வந்தது.

அவ்வளவு இனிமையாகத் தொடங்கிய நாள் இவ்வளவு துன்பமாக முடிய வேண்டுமா? அந்த வாரம் முழுவதும் அருணிடமிருந்து எந்தத் தகவலும் இல்லாமல் தரங்கிணி தவித்துப் போனாள்.

அவன் அவள் மீது கோபத்தோடு இருக்கிறான் என்பதை அவளால் தாங்கவே முடியவில்லை.



அவன் யார்? அவனுக்கும் அவளுக்கும் என்ன உறவு? அவன் கோபம் அவளை என்ன செய்ய முடியும்?... ஊகம் ஒன்றும் அவளை ஆறுதல் படுத்துவதாக இல்லை.

அவளது குற்றச்சாட்டு பொய் என்றால் அதை மறுத்து விஷயத்தை அவளுக்கு அவன் விளக்கி இருக்கலாமே.

அனாதை இல்லத்தில் நாலு சுவர்களுக்கு இடையே வளர்ந்தவள், அவனை விடச் சின்னவள். இவளுக்கு என்ன தெரியும் என்று பொறுத்துப் போயிருக்கலாமே.

அல்லது இந்த மாதிரிப் பேசலாமா முட்டாள் என்று இரண்டு வார்த்தை திட்டியிருந்தாலும் பரவாயில்லையே. ஒரு வார்த்தை பேசாமல் முகம் திருப்பிக் கொண்டு போய்விட்டால் எப்படி?

தாளமாட்டாமல் இரவில் இரண்டு சொட்டு கண்ணீர் உகுத்துவிட்டு, குற்ற உணர்வுடன் அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.

அழுவது அன்னை சாரதாவுக்குப் பிடிக்காது. அழுவது கோழைத்தனம். எந்தவிதப் பிரச்சினையையும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும் என்பார். வளமான மூளையையும் ஆரோக்கியமான உடலையும் கடவுள் அளித்திருக்கையில் சோம்பியிருந்து அழுவது முட்டாள்தனம் என்பார்.

முட்டாள்தனம் தானோ?

அவன் முகம் திருப்பினால் இவளால் பேச முடியாதா? அருண்குமாரின் கடிதங்களை எறிந்து விட்டாள்தான். ஆனால் அவனது நிறுவனத்தின் பெயர் அவளுக்குத் தெரியும்தானே? டெலிஃபோன் டைரக்டரியில் நம்பரைக் கண்டுபிடித்து, டெலிஃபோன் செய்து, அன்று

அதிகப் படியாகப் பேசியதற்கு வருந்துகிறேன் என்றால் முடிந்தது விஷயம்! இதற்குப்போய் அழுவானேன்?

ஆனால் அவள் எண்ணியது போல அவ்வளவு சுலபமாக விஷயம் முடியவில்லை.

ஏனெனில், வயிற்றில் சிறகடித்த பட்டாம் பூச்சிகளை அடக்க முயன்றபடி அவள் அருண்குமாரின் தனி நம்பருக்கு டயல் செய்த போது ஃபோனை எடுத்தது அவனுடைய செகரட்டரிதான்.

அருண்குமார் ஊரிலேயே இல்லை என்றாள் அவள். யார் என்ன விஷயம் என்று சொன்னால் குறித்து வைத்துக் கொள்வதாகக் கூறவும் ஒரு கணம் தயங்கி விட்டு அடையாறு வீடு விஷயமாக என்று சொன்னால் போதும் என்று கூறி டெலிஃபோனைக் கீழே வைத்தவளுக்கு சொத்தென்றிருந்தது. இதற்கா இந்தப் பாடு?

ஆனால் ஒரு வகையில் அருண் ஊரில் இல்லாதது அவளுக்குத் திருப்தியாகவே இருந்தது. அதனால்தான் அவன் தொடர்பு கொள்ளவில்லை என்று சமாதானம் அடையவும் முடிந்தது.

ஒரு கேஸ் விஷயமாகக் கோயமுத்தூர் வரை சென்ற அருண், குன்னூரில் பெற்றோருடன் இரண்டு நாள் டேரா போட்டுவிட்டு நிதானமாகத் தான் திரும்பினான்.

அதற்குள் தரங்கிணியின் மேல் இருந்த கோபமும் ஆறியிருந்தது. கெட்டிக்காரிதான். பளிச்சென்று பாயின்டைப் பிடித்து விட்டாளே என்று உள்ளூர சிலாகித்துக் கொண்டான்.

ஆனால் முக்கியமான விஷயம் என்ன என்றால் அவன் விற்கும்படி சொன்னது பெரும்பாலும் அவளது நன்மையைக் கருதியும்தான். மோகனிடம் பேசி அவளுக்குக் கொஞ்சம் அதிகமாகவே பணம் வாங்கிக் கொடுக்க நினைத்தால் அவள் அவனையே தூக்கி எறிந்து பேசிவிட்டாளே!



ஆனால் அப்படி ஓர் ஆத்திரத்தில் பேசும் போதும் தாக்க முச்சென்று கத்தாமல், குரல் கீச்சிடாமல் அவள் பேசிய அழகை, கோபம் தணிந்துவிட்ட இப்போது எண்ணிப் பார்த்து அவனால் ரசிக்க முடிந்தது.

சென்னை திரும்புமுன் மேட்டுப்பாளையத்தில் இறங்கி தரங்கிணி வளர்ந்த இல்லத்தை ஒருதரம் பார்வை யிட்டு விட்டு, ஒரு பத்தாயிரம் ரூபாய் நன்கொடையும் அளித்துவிட்டு வந்தான்.

பைத்தியக்காரத்தனம்தான். ஆனாலும் மனதுக்கு இதமாய் இருந்தது.

இடையில் காட்பாடியில் இறங்கி இன்னும் ஒரு வேலையை முடித்துக் கொண்டு, டாக்சியில் அவன் சென்னை வந்து சேர்ந்தபோது மாலையாகியிருந்தது.

அலுவலகத்தில் இறங்கி, அவன் இல்லாதபோது வந்த கடிதங்களையும், டெலிஃபோன் 'கால்'களையும் பார்வையிட்டபோது, 'அடையாறு வீடு விஷயமாக' என்ற வரியைப் படித்ததும் முகம் மலர்ந்து சிரிப்பு வந்தது.

இப்போது அலுவலகம் முடிந்து வீடு சென்றிருப்பாள். நாளை தொடர்பு கொள்ள வேண்டும் என்று மனதுள் குறித்துக் கொண்டு, சென்று பார்த்து வந்த கேஸ் விவரங்களைச் சகாயத்திடம் சொல்ல அவரது வீடு சென்றவனை வினோதாவும் அவளுடைய அண்ணனுமாக வறுத்து எடுத்து விட்டனர்.

அருண்குமாரைக் கண்டதும், "வாப்பா அருண். அம்மா, அப்பா சுகமா? இருந்து சாப்பிட்டுவிட்டுப்

போப்பா'' என்றதோடு ஸ்டார் டி.வி. தொடரில் ஆழ்ந்து விட்டாள் வினோதாவுடைய அன்னை.

பதில் சொல்ல வாயெடுத்த அருண், 'அவளது கவனம்' தன்னிடம் இல்லை என்பதை உணர்ந்து, பேசாமல் திரும்பி சகாயத்தின் அறையை நாடிச் சென்றான்.

சென்று வந்த விவரங்களைக் கூறி முடிப்பதற்காகவே காத்திருந்தவர்கள் போல, ''முடிந்ததா? நாலு நாட்களாகப் பாராமல் வினோவுக்குக் கண்பூத்து விட்டதாம். மற்றதைப் பிறகு வைத்துக் கொள்ளுங்கள், தாத்தா'' என்று உரிமையோடு அருண்குமாரைக் கைப்பிடியாய் இழுத்துச் சென்றான் மோகன் - வினோதாவின் அண்ணன்.

அண்டை கொடுத்ததுபோல அண்ணனும் தங்கையுமாக இருபுறமும் அமர்ந்து அவனை விசாரித்த விதமே அருண்குமாருக்கு அவ்வளவாகப் பிடித்தமாயில்லை. ஆனால் மோகனின் அவசரம் உணர்ந்திருந்ததால் பொறுமையாகவே பதில் சொன்னான்.

''விஷயம் எப்போது முடியும்? முதலில் அதைச் சொல்லு, மச்சி'' என்று முதலிலேயே விஷயத்துக்கு வந்தான் மோகன்.

''கொஞ்சம் பொறுமையாகத்தான் இருந்தாக வேண்டும், மோகன். இப்போதுதான் அந்த வீட்டையே தனதென்று எண்ணத் தொடங்கி இருக்கிறாள் தரங்கிணி...''

''தரங்கிணி? பேர் நன்றாய்த்தான் இருக்கிறது. ஆள் எப்படி?'' என்று கண்சிமிட்டிக் கேட்டான் அடுத்தவன்

''ச்சு. சரியான பட்டிக்காடு அண்ணா படுதாக்களைச் சேலையென்று சுற்றிக் கொண்டு நிற்பாள்



அவளைப் பார்த்தால் நமக்கு வேர்க்கும். அனாதைக் கழுதை. மூஞ்சியும் முகமும் சகிக்காது'' என்று பழிப்புக் காட்டினாள் வினோதா.

''அவள் தோற்றம் பற்றி நமக்கு என்ன? அவளைப் பொறுத்த வரையில் அந்த வீடு அவளுடைய தாயின் வடிவம். விற்கப் பிரியம் இல்லை. நடைமுறைச் சிரமங்களை எடுத்துச் சொல்லி மெல்ல மெல்லத்தான் மனம் மாற்ற வேண்டும்'' என்றான் அருண்குமார் பொதுப்படையாக.

''மெல்ல மெல்லவா? அதற்குள் வேறே எவனாவது மோப்பம் பிடித்து விலையேற்றி விடுவான். அந்த இடத்தில் ஒரு 'லக்ஜரிஃப்ளாட்' கட்டி விற்றால் அள்ளிக் கொண்டு போவான்கள். பனிரெண்டு ஃப்ளாட், முப்பது லட்சம் அப்படியே லாபம் அடிக்கலாம் என்றால் உனக்கு அவசரம் தெரியவில்லையே.''

''அவசரமா? அருணுக்கும் அவசரத்துக்கும் முதல் எழுத்து மட்டும்தான் சம்பந்தம். அந்த அனாதை இவருக்கும் மேல்'' என்றாள் வினோதா உதாசீனமாக.

''அவளுக்கு என்று ஒரு பெயர் இருக்கிறது. அதை விட்டு ஏன் சும்மா சும்மா அனாதை என்றே குறிப்பிடுகிறாய்?'' என்று எரிச்சல் பட்டான் அருண்குமார்.

''பெயர் இருப்பதால் மட்டுமே அவள் அனாதை இல்லை என்று ஆகிவிடுமா? அனாதையை அனாதை என்றுதான் சொல்லுவேன். அனாதை அனாதை அனாதை!'' என்று கீச்சிட்டாள் வினோதா.

வெறுப்புற்று அருண்குமார் முகம் திருப்பி எழ, ''ஸ்... அமைதி, அமைதி.'' என்று தங்கையைச் சாந்தப்படுத்தினான் மோகன். அருணிடம் திரும்பி, ''மச்சி, நீ அந்தப் பெண்ணின் மனது நோகாமல் விஷயம் நடக்க வேண்டும் என்று போனால் இப்போதைக்கு ஏன்

A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark



எப்போதுமே அந்த இடம் நமக்குக் கிட்டாமல் போய்விடலாம். நான் வழி சொல்லித் தருகிறேன். அதன்படி செய். முதலில் ஒரு ஃபைவ் ஸ்டார் ஓட்டலுக்குக் கூட்டிப் போ. தகதக என்று இரண்டு சேலை பரிசு கொடு. அப்படி இப்படி இரண்டு உரசு உரசினால் தானாகக் காலில் விழுந்து விடுவாள். இன்னும் மிஞ்சினால் இரண்டு பெக் ஊற்றிக் கொடுத்து, அறைக்குள் தள்ளிக் கொண்டு போய் விட்டால் அப்புறம் கையெழுத்துப் போடாமல் எங்கே போய் விடுவாள்? நம்ம வேலையெல்லாம் அப்படித் தான்'' என்று தன் பிரதாபத்தை அவிழ்த்தான்.

தரங்கிணிக்குப் பரிந்து தன்மேல் அருண்குமார் எரிச்சல் காட்டிய ஆத்திரத்தில், ''உன் கெட்டிக்காரத்தனம் இவருக்கு ஏது, அண்ணா? ஏதோ போனால் போகிறது என்று நான் ஒருத்தி கழுத்தை நீட்டுகிறேனே தவிர இவரது சாமர்த்தியம் பார்த்தா? ஊஹூம்,'' என்று அவனை மட்டம் தட்டினாள் வினோதா.

''அப்படி ஒன்றும் கழுத்தை நீட்டும்படி நான் உன்னை ஒருநாளும் கேட்டது இல்லையே'' என்று அருணும் சுருக்கெனப் பதில் சொல்லிவிட அவள் முகம் செங்குரங்காய்ச் சிவந்தது.

நிலைமை ரசாபாசமாகி விடாமல், ''அமைதி! அமைதி!'' என்று மீண்டும் இருவரையும் சாந்தப்படுத்தினான் மோகன். கூடவே காரியத்திலேயே கண்ணாக, ''சொல்லுப்பா.. அந்தப் பெண்ணிடம் நான் வேண்டுமானால் நேரடியாக... பார்க்கட்டுமா?'' என்று கேட்டான்.

அவனது சுயப்பிரதாபம் நினைவு வர, ''இல்லை இல்லை. நானே பார்த்துக் கொள்கிறேன். நீ இதில் தலையிட வேண்டாம். வீட்டை ஒப்படைப்பது தொடர்பாக நாளன்று அவளைச் சந்திக்கப் போகிறேன்'' என்றான் அருண்.



சட்டென நிமிர்ந்தாள் வினோதா. தொடர்ந்து மூன்றாவது ஞாயிறு. இவன் என்ன நினைத்துக் கொண்டான்?

''நானும் கூட வருவேன்''

''அவசியம் இல்லை.''

''ஏன்? அண்ணன் சொன்ன வழியைக் கடைப்பிடித்துப் பார்க்கப் போகிறீர்களோ?''

அருவருப்புடன் அவன் முகம் திருப்பவும், ''எனக்கு தெரியாமல் அவளிடம் ஏதும் கொஞ்சப் போவது இல்லையென்றால் என்னைத் தடுப்பானேன்? நான் தாத்தாவிடம் சொல்கிறேன்...!'' என்று கிளம்பினாள் வினோதா.

செல்லப் பேத்தி! குழந்தையாகவே பாவித்துப் பேசுவார். ''சின்னப்பிள்ளை. அவளை அழவிடாதே, அருண்'' என்பார்.

''வந்தால் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டும். இல்லையானால் வராதே'' என்றான் குரலில் கண்டிப்புடன்.

அருண்குமாருடைய காரியதரிசி கூறியதற்கிணங்கத் தயாராக இருந்தாள் தரங்கிணி.

வழக்கத்தை விடச் சீக்கிரமாகவே தயாராகி விட்டவளுக்குக் காத்திருந்த நேரமெல்லாம் எதிர்பார்ப்பும், பயமுமாக ஒரே படபடப்பு.

அவனது கோபம் ஆறியிருக்குமா இல்லையா? ஆறாவிட்டாலும் அவள்தான் மன்னிப்புக் கேட்கப் போகிறாளே!

ஆவலும் ஆர்வமுமாகக் கார் சத்தம் கேட்டதும் அவசர அவசரமாக ஓடிவந்தவளுக்கு, கார் அருகே முகத்தில் ஓர் இளப்பமான பார்வையுடன் கையால் கறுப்புக் கண்ணாடியைச் சுழற்றியபடி நின்று கொண்டிருந்த வினோதாவை பார்த்ததும் சொத்தென்று ஆயிற்று.

# 7

சில பெரிய மூச்சுகளை எடுத்துத் தன்னைச் சமனப்படுத்திக் கொண்ட பிறகே விடுதியை விட்டு வெளியே வந்து தான் இருப்பதைக் காட்டிக் கொண்டாள் தரங்கிணி. அவளுக்குத்தான் வினோதாவை ஏற்கனவே சந்தித்த அனுபவம் ஒன்று இருக்கிறதே!

காரை நெருங்கியதும் அவள் அஞ்சியது போலவே, ''இதுதான் உன் பொந்தா?'' என்று உதாசீனக் குரலில் வினவினாள் வினோதா.

''நான் தங்கியிருக்கும் விடுதி, இதுதான்'' என்றாள் அவள் சுருக்கமாக.

பெரிய விடுதி என்று தோளைக் குலுக்கினாள் மற்றவள்.

சுற்றிவந்து அருண் பின் கதவைத் திறந்துவிட உள்ளே ஏறி அமர்ந்தாள் தரங்கிணி.

அருண் ஏறி அமர்ந்ததும் அவன் புறம் திரும்பி, தோளில் இரு கைகளையும் வைத்து அழுத்தி, ''இந்தப் பெண்ணிடம் பேசுவதைச் சீக்கிரமே பேசி முடியுங்கள், அருண். இன்றேனும் நிம்மதியாக இருக்கலாம்'' என்றாள் வினோதா.

அவளது கைகளை விலக்கிவிட்டு சற்று நேரம் பேசாமல் காரை ஓட்டினான் அருண்குமார்.

''இன்றைக்கு அம்மா உங்களுக்குப் பிடித்த அயிட்டங்கள் அத்தனையும் சமைத்து வைக்கச் சொல்லி இருக்கிறார்கள். அதனால் சீக்கிரமாக வேலையை முடித்து இந்தப் பெண்ணை அனுப்பி வையுங்கள், அருண்...''



''எனக்குக்கூட வேறே வேலை இருக்கிறது, மிஸ்டர் அருண்குமார். அதனால் நீங்கள் எதற்காக வரச் சொன்னீர்கள் என்பதை விரைவாகச் சொல்லி முடித்து விட்டால் எனக்கும் வசதியாக இருக்கும்.''

பொய். பொய்தான். அவளது கைப்பையைத் திறந்தால் சற்று நிறையவே வைத்துக் கட்டப்பட்டிருக்கும் புளிசாதப் பொட்டலம் தரங்கிணியின் பொய்யை நிரூபித்துவிடும். ஆனால் வினோதா இருக்கும் இடத்தில் இருப்பதே அவளுக்குக் கடினமாகப்பட்டது

அருகே இருந்த ஒரு மர நிழலில் காரை நிறுத்தினான் அருண்குமார். பின்புறம் திரும்பி, ''சென்ற வாரம் நான் சொன்னதை யோசித்துப் பார்த்தாயா? வெள்ளை யானை என்பார்கள். அதுபோல இந்த வீட்டை வைத்துக் கொள்வது உன்னால் தாங்கமாட்டாத அதிகச் செலவாக இருக்கும். அதைவிட விற்றுவிட்டால் சுளையாகக் கிட்டத்தட்ட அறுபது லட்சம் ரூபாய் கிடைக்கும். உரிய முறையில் அதை 'டெப்பாசிட்' செய்தால் உன் மாதவருமானமே ஏழாயிரம் ரூபாய்க்கு மேல் வரும். அதை அரசி மாதிரி செலவு செய்து கொண்டு ஆனந்தமாக வாழலாம். நன்றாக யோசித்துப் பார் தரங்கிணி!''

''இப்படிச் சொன்னால் அனாதை ஆசிரமத்தில் வளர்ந்தவளுக்கு என்ன புரியும்?'' என்றாள் வினோதா இடையிட்டு. ''ஐந்தும் பத்தும் மட்டுமே பழக்கப்பட்டவள் இவள். நிறையப் பணம் என்றால் என்னவென்றே ஐடியா வராது. முதலில் ஓர் இரண்டு லட்சம் ரூபாயைக் கொண்டு வந்து கொடுத்து இவளையே இரண்டுதரம் எண்ணிப் பார்க்கச் சொல்லுங்கள். அப்புறமாய் இதுபோல முப்பது மடங்கு என்றால் ஜொள்ளு விட்டுக் கொண்டு கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டுப் போகிறாள்.''

தரங்கிணியின் முகம் ரத்தமெனச் சிவந்தது. ஒதுங்கிப் போகலாம் என்று பார்த்தாலும் இந்தப் பெண் விடுவதாக இல்லையே! ''தான் திருடி; பிறரை நம்பாள்'' என்பார்கள். நீங்கள் உங்களைப் போலவே பிறரையும் எண்ணிப் பேசி விட்டீர்கள். மிஸ் வினோதா. எல்லோருமே உங்களைப் போலப் பணத்துக்காக வாயைப் பிளப்பவர்கள் இல்லை'' என்றாள் கடுமையாகவே.

வினோதா கொதித்துப் போனாள். ''ஏண்டி, கூலிக்கு மாரடிக்கிற கூட்டம் நீ. யாரைப் பார்த்து,'' எனுமுன் அவளது கைஎலும்பு ஒடிந்து விடும்போல அழுத்தி, ''சும்மாயிரு'' என்று அடிக்குரலில் சீறினான் அருண். ''இல்லாவிட்டால் இறங்கி ஒரு டாக்சி பிடித்துக் கொண்டு வீட்டுக்குப் போ.''

ஆத்திரத்துடன் முறைத்தவள், அவன் கண்ணில் இருந்த கடுமையில் திகைத்தாள். கையில் இருந்த அழுத்தம் வேறு வலித்தது. இப்போது மேலே பேசுவது பிசகு என்பது ஒருவாறு புரிந்து, ''இருக்கட்டும், பிறகு பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்று உள்ளூரக் கறுவியபடி முகத்தை வெளியே திருப்பிக் கொண்டாள்.

மீண்டும் தரங்கிணியிடம் திரும்பினான் அருண். ''யோசித்துப் பார், தரங்கிணி. உன் தாத்தா உனக்கு இந்த வீட்டை மட்டும் விட்டுப் போயிருக்கிறாரே தவிர, இதை பராமரிக்க என்று எந்தப் பணமும் வைத்துப் போகவில்லை. காரணம் என்னவாக இருக்கும், சொல்லு. என் பேத்தி புத்திசாலித்தனமாக இந்த வீட்டை விற்று, அந்தப் பணத்தைப் பயன்படுத்திக் கொள்வாள் என்றுதானே?''

அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''நீங்களும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், அருண்'' என்றாள் தரங்கிணி அவன் பாணியையே பின்பற்றி. ''உங்களைப் போல நினைத்திருந்தால் தாத்தாவே இந்த வீட்டை விற்றுப் பணமாக்கி அதையல்லவா எனக்குக் கொடுத்திருப்பார். மாறாக வீட்டை விட்டுப் போவானேன்? என் பேத்தி அவளுடைய தாயின் நினைவாக இந்த வீட்டைப் பாதுகாக்க வேண்டும் என்றுதானே?''



பதில் சொல்ல மாட்டாமல் வேறு வழிக்குத் திரும்பினான் அருண். ''தரங்கிணி, நீ ஓர் அழகான பெண். தெரியுமல்லவா?'' வினோதாவின் முகம் கருப்பதையும் அவள் உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு இருப்பதை தன் ஓரக்கண்ணால் கவனித்துவிட்டு இவள் இப்படி வாயை மூடிக் கொண்டிருந்தாலே போதும் என்று எண்ணியபடி மேலே தொடர்ந்தான். ''இந்த மாதிரி ஒரு பெரிய வீட்டில் தனியாக இருப்பது நல்லதல்ல. உள்ளே என்ன நடந்தாலும்.''

''என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும்'' என்றாள் தரங்கிணி பட்டென்று.

''என்ன தெரியும்? நள்ளிரவில் ஜன்னலைப் பெயர்த்துக் கொண்டு நாலு பேர் உள்ளே நுழைந்தால் அப்புறம் கிழிந்த நாராய்த்தான்.''

கன்றிய முகத்தைத் திருப்பி, ''அக்கம் பக்கத்தில் கூட மனிதர்கள் இருக்கிறார்கள். ஆபத்து என்று குரல் கொடுத்தால்....'' என்று அவள் தொடருமுன் ''ஒருவரும் உதவிக்கு வரமாட்டார்கள். இந்த மாதிரி ரௌடிகளிடம் மாட்டிக் கொண்டு உயிரைவிட எந்த முட்டாளும் முன் வரமாட்டான். இது சென்னை மாநகரம், தரங்கிணி அக்கம்பக்கத்து உதவியை நம்பி எதையும் திட்டமிட வேண்டாம்'' என்று எச்சரித்தான் அருண்.

தரங்கிணி, தயங்க, வாய்ப்பு கிடைத்தது என்று மீண்டும் ஊடே புகுந்தாள் வினோதா. ''உதவியைத்

தேடினால்தானே அருண்? அவளுக்கே அதில்தான லயிப்போ என்னவோ'' என்றாள் ஓர் ஏளனச் சிரிப்புடன்.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் முயற்சியில், தரங்கிணியின் கைகள் இறுகி, உதட்டோரம் வரை வெளுத்து, மீண்டும் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.

கண்களை இறுகமூடி, ஒரு பெரிய மூச்செடுத்து விட்டவள், சட்டெனக் காரை விட்டு இறங்கினாள். ''நீங்கள் முதல் கடிதத்தில் கேட்டபடி நான்தான் தரங்கிணி என்று நிரூபித்துவிட்டேன் என்று நினைக்கிறேன், மிஸ்டர் அருண். என் வீட்டுச் சாவியை என்னிடம் ஒப்படைக்க உடனே ஏற்பாடு செய்யுங்கள்'' என்று ஒரு ராணியின் கம்பீரத்துடன் உத்தரவிட்டவள், மேலே எதுவும் சொல்லாமல், மற்றவர் சொல்வதற்கு இடமும் கொடாமல், நிமிர்ந்த தலையுடன் விரைந்து சென்று விட்டாள்.

அவள் கண்மறையும் வரை பார்த்திருந்துவிட்டு, ''திருப்திதானா?'' என்று வினோதாவிடம் கசப்பும் வெறுப்புமாய்க் கேட்டுக் காரை எடுத்தான் அவன்.

சகாயத்தின் வீட்டு கேட்டருகே காரை நிறுத்தி ''உன் அண்ணனுக்கு எப்பேர்ப்பட்ட உதவி செய்திருக்கிறாய் என்பதை அவனிடம் நீயே சொல்லிக் கொள். எனக்கு வேறு வேலை இருக்கிறது'' என்று அவள் இறங்கியதும் காரைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டான்.

''சொல்லத்தான் போகிறேன்'' என்று கறுவியபடி உள்ளே போனாள் வினோதா.

சொல்ல நினைத்தது ஒரு சூர்ப்பனகை வேலை. தன்னை அமைதிப்படுத்திக் கொள்ள தரங்கிணிக்கு வெகு நேரம் பிடித்தது. ''என்ன வார்த்தை சொன்னாள்'' என்று சீற்றம் தணிய மறுத்தது. அதைக் கேட்டுக் கொண்( அவளை ஓங்கி அறையாமல் அவன் சும்மா இருந்தது அதைவிட வலித்தது.



ஆனால் எப்படி அறைவான்?

அவர்கள் இருவருக்கும் இருந்த நெருக்கம் முன் எப்போதையும் விட அதிகமாக அவளைத் தாக்கியது. சேச்சே என்ன மாதிரி மனிதர்கள்! கூச்சநாச்சம் இல்லாத படி என்னவெல்லாம் பேசுகிறார்கள்? அவள் முன்னிலையிலேயே தோளில் கைபோட்டு ஒட்டிக் கொள்கிறாளே! தனிமையில் எந்த அளவு போவார்கள்? இந்த மாதிரி மனிதர்களை விட்டு எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் விலகி விடுவதே நல்லது.

மறுநாள், உணவு இடைவேளையில், சாவியையும் வீடு சம்பந்தமான மற்ற பத்திரங்களையும் நேரிலேயே கொண்டு வந்து கொடுத்த அருணின் முகம் பார்த்து கூட அவள் பேசவில்லை.

கை வரையில் பார்த்து பத்திரங்களைப் பெற்றவள், வீடு பற்றி அவன் ஏதோ பேசத் தொடங்கவும், ''சாவியை ஒப்படைத்ததோடு உங்கள் பொறுப்பு தீர்ந்தது, மிஸ்டர் அருண்குமார். இதற்கு மேல் உங்கள் நேரத்தை வீணாக்க நான் தயார் இல்லை. வணக்கம்'' என்று கூறித் திரும்பிச் சென்று விட்டாள்.

தரங்கிணி தீர்மானம் செய்து விட்டிருந்தாள். இனி இந்த வீடுதான் அவளது உலகம். ஒரு நாளில் முடியாது தான். ஆனால் மெல்ல மெல்ல ஒவ்வோர் இடமாகச் சுத்தம் செய்து வீட்டைப் பழைய மாதிரி - அம்மா இருந்த காலம் மாதிரி ஆக்கிவிட வேண்டும் என்று முடிவு செய்திருந்தாள். அவள் ஒன்றும் உடல் உழைப்புக்கு அஞ்சுகிறவள் இல்லையே.

சுலபமாக முடிவு செய்துவிட்ட போதும் அதை நிறைவேற்றுவதற்குள் அரும்பாடுபட்டுப் போனாள் தரங்கிணி.

எவ்வளவுதான் சீக்கிரமாக எழுந்தாலும் காலை வேளையில் சொந்த வேலைக்கே நேரம் சரியாகப் போயிற்று.

விடுதியில், டவலைத் தோளில் போட்டுக் கொண்டு போய்க் குழாயைத் திருப்பிக் குளித்து, தட்டைப் போட்டுக் கொண்டு காலை உணவை உண்டு, மதியத்துக்கும் உணவுப் பொட்டலத்தைப் பெற்றுச் சென்றவள், கிணற்றில் நீர் சேந்திக் குளிக்க வேண்டியிருந்தது; காலை உணவை அவளே தயாரித்து உண்ண வேண்டியிருந்தது. மதியம் கொண்டு செல்ல வேறு. இதற்காகப் பயன்படுத்திய பாத்திரங்களைச் சுத்தம் செய்வது, ஜன்னலையும் கதவையும் பார்த்துப் பார்த்துப் பூட்டுவது, திறப்பது என்று வேலையைவிட நேரம் அதிகம் செலவானதுதான் அவளுக்கு கஷ்டமாக இருந்தது. அத்தோடு அலுவலகத்திலிருந்து அதிகத்தூரம் என்பதால் அரைமணி நேரம் முன்னதாகவே கிளம்ப வேண்டியிருந்தது. துண்டிக்கப்பட்டிருந்த மின் இணைப்பு மீண்டும் பெற ஒருநாள் லீவு போட்டுவிட்டு அலைய நேர்ந்தது.

ஆனால் மின் இணைப்பு கிடைத்து, தண்ணீர் மோட்டார் ஓடத் தொடங்கியதோடு, பழைய விடுதி வாட்ச்மேனை அழைத்துச் சென்று மேலே தண்ணீர்த் தொட்டி, கீழே 'பம்ப்', இடைக்குழாய் அடைப்புகளைச் சீர் செய்ததும் வாழ்க்கை எவ்வளவோ எளிதாயிற்று.

'சுத்தம் சோறு போடும்' என்று வளர்ந்தவள். எனவே முதலில் ஒரு மூச்சாய் வராண்டா, ஹால், ஒரு படுக்கை அறை, சமையல் அறை முதலியவற்றைச் சுத்தம் செய்து புழக்கத்துக்கு வழி செய்ததோடு நில்லாமல் கிடைத்த நேரத்தையெல்லாம் வீட்டை ஒட்டடை அடிப்பதிலும், கூட்டிப் பெருக்கித் துடைப்பதிலுமே கழித்தாள்.

அந்தப் பெரிய வீட்டின் ஒருபுறமிருந்து சுத்தம்



செய்து கொண்டே வந்து, மூன்று நாளில் முடித்தாயிற்று என்று பார்த்தால் முதலில் தொடங்கிய இடத்தில் ஒட்டடையும் தூசியும் பழையபடியே பிடித்திருந்தது.

தோட்டம் அதற்குமேல். ஒருபுறமாய்ப் பெருக்கி முடித்தால், மாலை வருமுன் காற்றில் முன்போலவே குப்பை சேர்ந்தது.

பெரிய வீடு, உன்னால் சமாளிக்க முடியாது என்று அருண் கூறியது சரிதானோ என்று தோன்றத் தொடங்கி ஏது. இதற்கென்று வேலையாள் வைப்பது என்றால் அதுவும் கட்டுப்படியாகாதே!

அருண்குமாரின் கடைசி மிரட்டலில் அவளுக்கு அவ்வளவாக நம்பிக்கை இராதபோதும், தோட்டத்தில் வேலை செய்யும் போது கூட வீட்டைப் பூட்டிக் கொண்டுதான் செய்வாள். வேலை மும்முரத்தில் இருக்கும்போது அவள் அறியாமல் உள்ளே போய்விடக் கூடாதே! எப்போதும் எச்சரிக்கையுடனேயே இருந்தாள். அந்தப் பகுதியில் ரோந்து சுற்றும் கூர்க்காவிடம் கூடப் பத்து ரூபாய் கொடுத்து அவள் வீட்டுப்பக்கம் கூட இருமுறை வரும்படி ஏற்பாடு செய்தாள். கத்தி ஒன்றும் அவளது படுக்கையில் குடிபுகுந்தது. இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை வரப்பிரசாதமாய் வந்தது.

அதிகாலையிலேயே விழித்து, ஒரு சாதம் ரசம் வைத்து விட்டுத் தோட்டத்தில் இறங்கினாள். இயன்ற வரை ஆழமாக ஒரு குழிவெட்டி, ஓரளவு கூட்டிச் சேர்ந்த இலைச் சருகுகளை அதில் போட்டுத் தீவைத்துவிட்டு, மேலே மேலே பெருக்கப் பெருக்கக் குப்பைகளை அந்தத் தீயில் போட்டுக் கொண்டே போனாள். பதினோரு மணி அளவில் கை கன்றி விட்டபோதும், தோட்டம் பாதிக்கு மேல் சுத்தமாகி விட்டாற்போலத் தோன்றவும் சிறு ஓய்வு என்று கல் பெஞ்சியின் மேல் சாய்ந்து அமர்ந்தாள்.

உடல் சோர்வில் அப்படியே கண் அயர்ந்திருப்பாளோ என்னவோ, யாரோ உச் உச் உச் என்று உச்சுக் கொட்டும் சத்தத்தில்தான் விழிப்பு வந்தது.

லேசாக விழிப்பு தட்டியதுமே, தோட்டத்து மூலையில் எரிந்து அடங்கிக் கொண்டிருந்த சருகுகளின் தீவாசனையோடு வேறு ஏதோ வாசனை சென்ட், சிகரெட் புகை மணத்தையும் சேர்த்து நாசி உணர்த்தவே தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்தாள்.

ஏதோ ஹிந்தி சினிமா ஹீரோ மாதிரி, பூவேலை செய்த ஜிப்பாவும் நீள முடியும் ஒரு கையில் எரியும் சிகரெட்டுமாக மொழுமொழுவென்று எதிரே நின்ற அன்னியனைக் கண்டதும் மலங்க விழித்தாள்.

''அய்யோ! பயந்து விட்டாயா? என்னைப் பார்த்தால் பயப்படும் படியாகவா இருக்கிறது. சாரி...ரிம்மா... பார், என் கையில் கத்தி, கபடா ஒன்றும் இல்லை. நான் ஒரு ஜென்டில்மேன், கண்ணு அனாவசியமாக உழைத்து உடல் தேயும் ஓர் அழகான பெண்ணுக்குக் கை கொடுக்க வந்த ஒரு பணக்கார வாலிபன். அவ்வளவுதான் என் பெயர் தெரியுமோ? மோகன்தாஸ். அருண் சொல்லியிருப்பானே; 'தாஸ் கன்ஸ்ட்ரக்ஷ'னில் பாதிப் பங்கு என்னது. மீதிப்பாதி என் தங்கைக்குத்தான். இப்போதைய எம்.டி.யும் நான்தான்'' என்று பகட்டாகக் கூறிப் பல்லைக்காட்டி நகைத்தான்.

தாஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்!

அருண் சொன்ன 'ரியல் எஸ்டேட்'காரன் இவன்தானா? அவனுக்கு எவ்வளவு பணம் கமிஷன் பேசியிருப்பான்?

சுதாரித்துக் கொண்டு, ''இல்லை சொல்லவில்லை'' என்றாள் தரங்கிணி. ''என்ன விஷயமாய் வந்தீர்கள்?''



என்று அமைதியான குரலில் விசாரித்தாள்.

''ஆகா! ஜலதரங்கம் இசைபோல என்ன இனிமையான குரல்'' என்று சிலாகித்தான் மோகன். ''நிஜத்தைச் சொல் கண்ணு, உன் குரலைக் கேட்டுவிட்டுத் தானே உனக்கு இந்தப் பெயரை வைத்தார்கள்?'' என்றான் செல்லச் சிரிப்புடன்.

''அதுபற்றி யாரும் என்னிடம் சொன்னது இல்லை'' என்றாள் தரங்கிணி குரல் மாறாமல். ''எனக்கு வேலை இருக்கிறது. நீங்கள் வந்த விஷயத்தைச் சீக்கிரமாகச் சொல்லி முடித்தீர்கள் என்றால் நன்றாயிருக்கும். இன்னொன்று என் பெயர் மிஸ் தரங்கிணி.''

ஒருகணம் மோகனின் சிரிப்பு மறைந்தது. இத்தனை குளிப்பாட்டலுக்கும் இவள் இளகவில்லையே!

உடனேயே மீண்டும் புன்னகையைப் பூசிக் கொண்டு, ''அதை இந்த வெயிலில் இங்கே வெளியே நின்று கொண்டுதான் பேசவேண்டுமா? வீட்டிற்குள் சென்று பேசலாமே'' என்று வீட்டை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தான்.

''மன்னிக்க வேண்டும்'' என்று அவனைத் தேக்கியது அவள் குரல். ''முன்பின் அறியாதவர்களை நான் வீட்டிற்குள் அனுமதிப்பது இல்லை. அதனால் வந்த காரியத்தை இங்கேயே சொல்லலாம்.''

ஒருகணம் பாம்பாய்ச் சிலிர்த்தவன், உடனேயே பற்கள் அத்தனையும் காட்டினான். ''நல்ல பாலிசி. ஊர் உலகம் இருக்கும் நிலையில் இந்த மாதிரி ரம்பைகள் கட்டா...யம் கடைப்பிடித்தாக வேண்டிய கொள்கை. ஆனால் நான் அன்னியன் இல்லையே! அருண்குமாருடைய நண்பன்...''

''சாரி'' என்றாள் தரங்கிணி. உள்ளூர எழுந்த

வலியை எதிரில் இருந்தவன் அறியாது மறைத்து, ''மிஸ்டர் அருண்குமார் எனக்கு அன்னியர்தான். அவரே அன்னியம் எனும்போது அவர் தொடர்பான மற்றவர்களும் அன்னியர்கள்தான்.

இப்போது எனக்கு வேலை இருப்பதால்...'' என்று உரைத்து, குறிப்பாக வாயிலை நோக்கினாள்.

''வா....வ்!'' என்று கைதட்டினான் மோகன். ''எவ்வளவு எச்சரிக்கையோடு இருக்கிறாய்... சாரி, இருக்கிறீர்கள்! உங்களைப் போல அழகான பெண்கள் அப்படித்தான் இருக்க வேண்டும்... புரிகிறது முகஸ்துதிக்கு மயங்கிவிடக் கூடாது என்கிற உறுதி உங்களுக்கு. ஆனால் உண்மையான பாராட்டைக்கூட ஒதுக்குகிறீர்களே, அதுதான்...''

''எனக்கு வேலை இருக்கிறது, என்றேன் மிஸ்டர் மோகன்'' என்று நினைவூட்டினாள் தரங்கிணி, குரலில் சற்றே அலுப்பைக் காட்டி.

''அப்படியானால் ஒன்று செய்வோமே. உங்களுக்கு வேலை இல்லாத நேரம் எப்போது என்று சொல்லுங்கள். நான் வந்து அழைத்துச் செல்கிறேன். அப்படியே தாஜ், சோழா ஷெராட்டான் என்று எங்காவது போய் நிம்மதியாகப் பேசலாம்'' என்று இளித்தவன் அவள் முகம் கடுப்பதைக் காணவும், ''ஓகே, மிஸ் தரங்கிணி. விஷயத்துக்கு வருவோம். நீங்கள் இப்படிப் பூ உடல் ஓடாய்த் தேய உழைக்க வேண்டாம் என்பதைத்தான் சொல்ல வந்தேன். இந்த வெண்டைப் பிஞ்சு விரல்கள் கன்றிப் போக விடுவது என்றால் என் மனம் தாளவில்லை...'' என்று பேசியபடியே அவளது கையைப் பற்ற முயலவும் சட்டெனப் பின்னடைந்தாள் தரங்கிணி.

''பாருங்கள் மிஸ்டர். என் உடம்புக்கு எது நல்லது எது கெட்டது என்று தீர்மானிக்க எனக்குத் தெரியும்.



இதைப் பற்றித்தான் சொல்ல வந்தீர்கள் என்றால் நீங்கள் போகலாம்'' என்று திரும்பினாள்.

''அதில்லை, கண்ணு...'' என்று தொடங்கியவன் அவள் பார்வையில் உடனே திருத்திக் கொண்டான். ''த... த... மிஸ் தரங்கிணி, இந்த இடத்தை விற்றீர்கள் என்றால் நல்ல விலை கிடைக்கும்; இப்படி வேலை செய்யத் தேவை இராதே என்றுதான் சொல்ல வந்தேன்....''

''நினைத்தேன்'' என்று ஏளனமாக உதட்டைப் பிதுக்கினாள் தரங்கிணி. ''ஆனால் மிஸ்டர் மோகன்தாஸ், இந்த வீட்டை நான் விற்பதாக இல்லை என்பதை முதலும் முடிவுமாகத் தெரிந்து கொள்ளுங்கள். அத்தோடு என் முடிவை உங்கள் அருண்குமாரிடமும் போய்ச் சொல்லுங்கள். குட்பை'' என்று கூறித் திரும்பித் துடைப்பத்தை எடுத்தாள். அந்தப் பேச்சு அத்தோடு முடிந்தது, வேலையைத் தொடரப் போகிறேன் என்பது போல. ''மூடு சரியில்லாத நேரத்தில் வந்து விட்டேன் போலும். பரவாயில்லை. நான் பிறகு வருகிறேன். பை... பா...ய்!'' என்று நகைமுகமாகவே கையாட்டி விட்டுக் கிளம்பினான் மோகன்.

'ஹி கேன் ஆல்வேஸ் ஸ்மைல், ஸ்மைல், அன்ட் ஸ்மைல், யெட் பீ எ வில்லன்' என்று எதிலோ படித்த நினைவு தரங்கிணிக்கு வந்தது. பாம்புகளே பல்லைக் காட்டித்தானே கொத்துகின்றன. இவன் மனிதப்பாம்பு. இவனிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

இவனெல்லாம் அருண்குமாருடைய நண்பன்! பிறகு அவன் எப்படி இருப்பான்? ஒருவனுடைய நண்பனை வைத்து அவனை எடை போடலாம் என்பது சரிதான் போலும். இனி அருண்குமார் வந்தால் அவனுக்கும் இதே மரியாதைதான் கொடுக்க வேண்டும்.

ஆனால் அவன் எங்கே இனி இங்கே வரப்போகிறான்? அவன்தான் அந்த வினோதாவின் வீட்டில் விருந்து உண்ணப் போயிருப்பானே!

தன்னையும் மீறி தரங்கிணியின் விழிகளில் நீர் நிறைந்தது.

# 8

**யா**ரோ ஒருவன், சொல்லப் போனால் நாலே நாலு தடவைதான் தரங்கிணி அருண்குமாரைச் சந்தித்திருப்பதே; அவன் அவனுக்குப் பிடித்தமான ஒருத்தியின் வீட்டில் உணவருந்தப் போகிறான் என்றால் அதில் இவள் அழுவதற்கு என்ன இருக்கிறது?

முட்டாள்தனத்துக்கும் ஓர் எல்லை உண்டில்லையா? ஆத்திரத்துடன் கண்களைத் துடைத்தவள், அருண்குமாரை அடியோடு மறக்கும் முடிவுடன் மீண்டும் வேலையில் மும்முரமாக முனைந்தாள்.

வியர்வை ஆறாகப் பெருகிய போதும், உடல் களைத்துச் சோர்ந்த போதும் கூட விடவில்லை. இலை தழைகள், வேண்டாத செடிகள் அகற்றப்பட்டு, பெரும்பாலும் கல்கட்டிகள் சமப்படுத்தப்பட்டு, கிட்டத்தட்டத் தோட்டம் முழுவதையும் துப்புரவு செய்து முடித்தபோது அவளால் சரியாக நிமிர்ந்து நடக்கக் கூட முடியவில்லை.

மண்வெட்டி, கடப்பாரை, பிரம்புக் கூடை என்று அத்தனையையும் முன்பிருந்த இடத்தில் கொண்டு வைத்துவிட்டு, சோபாவில் சாய்ந்தவளுக்கு அப்படியே உறங்கி விடலாம் போல இருந்தது.

அரை சென்டிமீட்டர் அளவுக்கு அப்பியிருந்த அழுக்குமண்ணும், வியர்வை உப்பும் வெறுப்பூட்ட,



குளியலறைக்குப் போய் நன்றாகத் தேய்த்துக் குளித்தாள். சீக்கிரமே வெடவெடவென்று குளிரத் தொடங்கவும், டவலைச் சுற்றிக் கொண்டு வந்து அரைகுறையாக உடை மாற்றியவள், அதற்குமேல் ஒன்றும் முடியாமல் அப்படியே படுத்து உறங்கி விட்டாள்.

சுள்ளென்று வெயில் அடிப்பதை உணர்ந்து விழித்த போது அவளால் கண்களைத் திறக்கவே முடியவில்லை; தலைபிளந்து விடும்போல வலித்தது.

சிரமத்துடன் இமைகளைப் பிரித்துப் பார்த்தால் மணி ஒன்பது. மூட்டுக்கு மூட்டு இருந்த வலியும், தலைப்பாரமும், எலும்புக்குள்ளிருந்து பரவிய குளிரும் அவளுக்கு காய்ச்சல் வந்திருப்பதை உணர்த்தின.

ஆனாலும் அலுவலகம் செல்லவேண்டுமே என்று எழ முயன்றவள் முடியாமல் அப்படியே ஓய்ந்து விழுந்தாள். வாசல் கேட்டில் கட்டப்பட்டிருந்த பையில் கிடக்கும் பால்பாக்கெட்டை எடுத்து வந்து காய்ச்ச வேண்டும்; அலுவலகத்துக்கு லீவு சொல்ல வேண்டும்.

அலுவலகத்துக்குப் போகாவிட்டாலும் இதையாவது செய்ய வேண்டும். இப்போது அசதியாய்த் தெரிவதால் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு செய்ய வேண்டும் என்று படுக்கையில் சாய்ந்தவளுக்கு அதன்பின் சுய உணர்வே இல்லை.

தரங்கிணியின் வீடு பற்றிய 'டிக்ளரேஷ'னை தாங்கியிருந்த பத்திரிகை அருண்குமாரின் மேசைக்கு வந்திருந்தது. இதைத் தபாலில் அவளுக்கு அனுப்பி விடலாமா என்று ஒருதரம் நினைத்தபோதும் அவனுக்கு அதைச் செய்ய மனம் வரவில்லை.

ஆனாலும் அவளுக்கு இப்படி ஒரு பிடிவாதமா? அவ்வளவு பெரிய வீட்டை அவளால் தனியாக பார்த்துக் கொள்ள முடியுமா? சொன்னால் என்னெ

னவோ உள்நோக்கம் கற்பித்து அவனையே சாடிவிட்டாளே! படட்டும். பத்து நாள் பட்டால்தான், உடம்பில் உறைத்தால்தான் அவளுக்கும் உண்மை புரியும்.

அவளே பிடிவாதக்காரி, அதற்குமேல் ஏதோ உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு மேலும் வெறுப்பேற்றி விட்டாள், இந்த வினோதா. சே, என்னவெல்லாம் பேசிவிட்டாள்! ஒரு பெண் வாயில் வருகிற பேச்சா இது? அன்றிலிருந்து அவளைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை.

மதியம்வரை பொழுதைப் பிடித்துத் தள்ளுவது அருண்குமாருக்குக் கடினமாகப்பட்டது. மணி பன்னிரண்டு அடித்ததுமே, பத்திரிகையை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

அங்கே தரங்கிணி அலுவலகம் வரவில்லை, எந்தவித் தகவலும் தெரிவிக்கவில்லை என்று அறிந்ததும் அப்படியே ஆடிப்போனான்.

ஏன்? அவளுக்கு என்ன ஆயிற்று.

ஏதோ நினைவு வர, சுரீரென்று நெஞ்சில் வலித்தது. அன்று அவளை மிரட்ட வென்று சொன்னது.... வெறும் மிரட்டல் என்றும் சொல்வதற்கில்லை. பல்கிப் பெருகி வரும் குற்றங்களின் கணக்கும்தான் அவனை அப்படி எச்சரிக்க வைத்தது.

அன்று அவன் நாக்கில் சனியிருந்தது. அவன் சொன்னது நடந்தே விட்டதோ?

பந்தயக்கார் போல வேகமாக ஓட்டிக் கொண்டு வந்து அவளது வீட்டை அடைந்தான்.

பூட்டிய கேட் திறக்கப்படவில்லை. கேட்டில் கட்டி வைத்திருந்த பையில் போட்பட்டிருந்த பால் பாக்கெட் தயிராக மாறியிருந்தது. நின்று அழைத்து நேரத்தை



விரயமாக்காமல் கேட்டின் மேல் ஏறி உள்ளே குதித்து வீட்டை நோக்கி ஓடினான். அழைப்பு மணிக்கோ, அவனது குரலுக்கோ பதில் இல்லை. ஓடி ஓடிச் சென்று ஒவ்வொரு ஜன்னல் வழியாகவும் உள்ளே ஆராய்ந்தான்.

ஒரு ஜன்னல் வழியே பார்க்கையில் ஹால் சோஃபாவில் அவள் விழுந்து கிடப்பது தெரியவும் மீண்டும் நெஞ்சு நின்று துடித்தது.

ஏன்? ஏன் இப்படிக் கிடக்கிறாள்?

மெல்லக் குரல் கொடுத்தான். பதிலின்றிப் போக உரக்க அழைத்தான். அக்கம்பக்கத்தில் விசித்திரமாக எண்ணக்கூடும் என்ற நினைப்பே வரவில்லை.

பலமுறை அழைத்தபின், தரங்கிணியிடம் அசைவு தோன்றவும், ஒருவாறு ஒழுங்கான மூச்சு வந்தது அவளுக்கு.

மீண்டும் மீண்டும் அழைத்து, அவளை எழுப்பி, இப்போது நீயாக வந்து கதவைத் திறக்கா விட்டால் கதவை உடைத்து விடுவேன் என்று மிரட்டி, ஒருவாறு கதவைத் திறக்கச் செய்தான்.

ஆனால், நிதானமில்லாமல் தடுமாறியபடியே வந்து கதவைத் திறந்தவள் அப்படியே, அவன் மேலேயே சாய்ந்து விட்டாள்.

உடம்பு நெருப்பாய்க் கொதிப்பதை உணர்ந்த அருண், அவளை அப்படியே தூக்கிச் சென்று படுக்கையில் கிடத்தினான்.

ஒருகணம் யோசித்து, வீட்டை வெளியே பூட்டிக் கொண்டு சென்று, ஒரு டாக்டரை அழைத்து வந்தான். ஓர் ஊசி குத்திவிட்டு அவர் கிளம்பவும், அவரைக் கொண்டுவிட்டு விட்டு மருந்து வாங்கச் சென்றவன், மருந்துக் கடையிலிருந்தே தரங்கிணியின் அலுவலகத்துக்குத் தகவல் கொடுத்தான்.

அவனது அலுவலகத்தோடும் தொடர்பு கொண்டு, மறுநாள்தான் வரமுடியும் என்று கூறி மேலே எதுவும் விவரம் கேட்குமுன் ரிசீவரை வைத்துவிட்டு மீண்டும் தரங்கிணியிடம் ஓடிவந்தான்.

காய்ச்சல் வேகத்தில் கொதித்த அவளது நெற்றியை வருடிவிட்டான். கைகளைப் பற்றித் தடவிக் கொடுத்தான். கன்றிச் சிவந்திருந்த உள்ளங்கைகளைப் பார்க்கையில் கோபமும் பச்சாதாபமுமாகத் தவித்தான்.

மருந்தின் வேகத்தால் அலட்டல் நின்று விரைவிலேயே ஆழ்ந்து உறங்கி விட்டாள் தரங்கிணி. மீண்டும் வெளியே சென்று, பால், ரொட்டி போன்றவற்றை வாங்கி வந்தான்.

பாலைக் காய்ச்சி, அவள் லேசாக விழித்தபோது, அவளுக்கும் புகட்டித் தூங்க வைத்தான். தானும் ஒரு சோபாவை இழுத்து, அவளது அறை வாயிலில் குறுக்காகப் போட்டுக் கொண்டு அதில் சாய்ந்தபடியே உறங்கினான்.

இரண்டே நாட்களில் தரங்கிணியின் காய்ச்சல் குணமாகிவிட, இரண்டு நாட்களுமே அவள் அருகிலேயே இருந்து கவனித்துக் கொண்டான். இரண்டாம் நாள் அவள் அருகில் அமர்ந்தபடியே பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான் அவன்.

ஏதோ தோன்றவும் பார்த்தால், அவனையே வெறித்துக் கொண்டிருந்தாள் தரங்கிணி.

பத்திரிகையைப் போட்டுவிட்டு, ''என்னம்மா'', என்றவனிடம், ''நீங்கள் சொன்னதுதான் சரி'' என்றாள் தரங்கிணி கம்மிய குரலில். ''என்னால் முடியவில்லை. இதை விற்று விடுங்கள்'' என்றாள். அவன் சற்றுவியந்து நோக்கவும், அன்று அவன் சொன்னதையே தொடர்ந்து, ''இந்த வெள்ளை யானையைக் கட்டி மேய்க்க என்னால்



முடியவில்லை...'' என்றவளின் விழிகளில் நீர் அரும்பியது.

அவளது கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தான் அருண்குமார். ''உன் உடம்பு நன்றான பிறகு இதைப் பற்றிப் பேசலாம்'' என்றான் இதமாக.

''இப்போது காய்ச்சல் விட்டுவிட்டதே...'' என்று சிரிக்க முயன்றவள் உடனே அந்த முயற்சியைக் கைவிட்டாள். ''வந்து... வந்து அன்று உங்களைக் கமிஷன் பணத்துக்காக விற்கச் சொன்னீர்கள் என்றேனே! அதற்காக சாரி... ரொம்ப சாரி...''

''பரவாயில்லை. இப்போதேனும் உண்மை உணர்ந்து கொண்டாயே, அதுவே போதும், அலட்டிக் கொள்ளாமல் தூங்கு'' என்று அவளது நெற்றி மீது விழுந்த கூந்தல் சுருளை மிருதுவாக விலக்கிவிட்டான் அருண்.

''இன்னும் ஓர் உதவி''

''சொல்லு செய்கிறேன்''

''இந்த விற்பனை சம்பந்தமாக எல்லாவற்றையும் நீங்களே பார்த்துக் கொள்கிறீர்களா?.... எதுவும் என்னிடம் வராமல்... ஏதோ 'பவர்' எழுதிக் கொடுப்பது என்பார்களே, அதுபோலப் பத்திரம் கொண்டு வாருங்கள். கையெழுத்துப் போட்டுத் தருகிறேன். ஏனென்றால் இதை விற்பது தொடர்பாக எதையும் பார்ப்பது என்றால் எனக்குக் கஷ்டமாக இருக்கும்...''

''சரி'' என்றவன் மறுநாள் அதுபோன்ற ஒரு பத்திரத்துடன் வந்தான். நியாயமான விலைக்கு அந்த வீட்டை விற்கும் அதிகாரத்தை அவனுக்கு அளித்தது பத்திரம்.

படித்துப் பார்க்கும்படி கூறி அவள் கையில் கொடுத்

A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark



துவிட்டு, அவளது முகவாயைப் பற்றி, முகத்தை உயர்த்தினான் அருண். ''நான் செய்வது உன் நன்மைக்காகவே இருக்கும் என்கிற நம்பிக்கை இருந்தால் மட்டுமே கையெழுத்துப் போடு'' என்று அவளைச் சில விநாடி நேரம் நேராகப் பார்த்தான்.

மெல்லக் குனிந்து அவளது நெற்றியில் லேசாக முத்தமிட்டு விட்டுப் பேனாவை எடுத்துக் கொடுத்தான்.

அவள் கையெழுத்திட்டு, பத்திரத்தைக் கொடுத்த பின், அதை மடித்து உறையிலிட்டபடியே, ''மோகனின் கம்பெனி பழக்கமானது. அதனால் பணமும் கொஞ்சம் கூடுதலாகக் கிடைக்கும்'' என்றான்.

சற்றுமுன் இருந்த இதம் குறைந்து தரங்கிணியின் முகம் வாடியது.

பத்திரத்தைக் கைப்பெட்டியுள் வைத்துக் கொண்டிருந்த அருண் மேலே பேசினான். ''மற்றவர்கள் என்றால் கதவு, ஜன்னலுக்கெல்லாம்....''

''ப்ளீஸ், அருண். இதைப்பற்றி என்னிடம் எதுவும் சொல்லாதீர்களேன்.''

குரலில் இருந்த வேதனையைக் கேட்டுச் சட்டென நிமிர்ந்து பார்த்தவன், அவள் கண்ணீரை அடக்கப் பாடுபடுவதைக் கண்டு, பெட்டியைப் போட்டுவிட்டு ஓர் எட்டில் அவளை அடைந்தான் அருகமர்ந்து, ''ஷ், தரு. என்ன அசட்டுத்தனம்'' என்று அவளை மார்பில் சாய்த்தி, தட்டிக் கொடுத்தான்.

சட்டையில் கண்ணீரை உணர்ந்து; ''இதுவெறும் கட்டிடம் தரு. செங்கற்களை அடுக்கி சிமிண்டினால் இணைத்துக் கட்டிய வெறும் கட்டிடம். இதன் மீதா இவ்வளவு பற்றும் பாசமும் வைப்பது? உன் பாசத்தில் ஒரே ஒரு சதவீதம் இதனால் திருப்பித் தர முடியுமா?



[illegible]'' என்று கனிவாகக் கடிந்தான்.

அவன் மார்பில் புதைந்த முகத்தை அகற்றாமல், [illegible] வைக்கவும் ஓர் இடம் வேண்டுமல்லவா?'' [illegible] தரங்கிணி மெல்லிய குரலில்.

[illegible] வேண்டும். ஆனால் அந்தப் பற்றை [illegible] இந்தக் கட்டிடத்திடம் வைக்க வேண்டாம் [illegible] உன் அன்பைப் புரிந்து கொள்ளும் மனமும் [illegible] உடைய மனிதர்களிடம் வை என்கிறேன்'' [illegible] அருண்குமார்.

''அப்படி யாரும் இல்லை என்றால்?''

அவளை நிமிர்த்தி அவளது விழிகளை நேராகப் பார்த்தான் அருண். ''இருப்பார்கள். நிச்சயமாக இருக்கிறார்கள். கண்களை மூடியே வைத்திராமல் கொஞ்சம் [illegible] பார்க்க வேண்டும். புத்தியைக் கொஞ்சம் தீட்டித் தேட வேண்டும். ஏசுநாதர் 'தேடுங்கள் கிடைக்கும்' என்று [illegible] மாதிரித் தேடிப் பார்த்தால் நிச்சயம் கிடைப்பார்கள். தரு. தேவைப்படுவது எல்லாம் தேடுகிற மனம் [illegible]'' என்றான்.

அவனது குரலிலும், அவளது தோள் மீது படிந்திருந்த கரங்களிலும் இருந்த அழுத்தம் அவளுக்கு [illegible] உணர்த்தின.

பேச்சிழந்து அவன் முகத்தையே தரங்கிணி பார்த்துக் கொண்டிருக்க, அவன் பிடி மேலும் இறுகியது; அவனது முகமும் அவளை நோக்கிக் குனிந்தாற் போலத் தோன் [illegible] போது மீண்டும் அவன் நிமிர்ந்தான்.

அவளது கன்னங்களில் வடிந்து லேசாகக் காயத் [illegible] தொடங்கியிருந்த கண்ணீர்க் கறையைத் துடைத்து, ''இந்த விழிகளில் இனி ஒருபோதும் நீர் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் உறுதி கொண்டிருக்கை

யில் நீ பாட்டில் அழுதால் எப்படி?'' என்று செல்லமாகக் கடிந்தான்.

''இனி உன் முகத்தில் சிரிப்பு தவிர வேறு எதையுமே நான் பார்க்கக் கூடாதாக்கும்'' அது இது என்று பேசி அவள் முகத்தில் சிரிப்பை வரவழைத்த பிறகே கிளம்பிப் போனான்.

மீண்டும் ஒரு வேலைக்காரி, வேலைக்காரனோடு திரும்பி வந்து, ''என் வீட்டு வேலையாட்கள் தேவைப் படும் வரை உனக்கு உதவியாக இங்கே இருப்பார்கள். தேவையில்லை என்று சொல்லிப் பயன் இல்லை. ஏனென்றால்... என்றவன் பளீரென்ற புன்னகையுடன், ''உன் எதிர்காலத்தை நான் என் கையில் எடுத்துக் கொண்டு விட்டேனாக்கும்'' என்று வேடிக்கை போலவே உறுதியான குரலில் கூறவும், முகம் மலர அவளும் ஒப்புக் கொண்டாள்.

வராண்டாவில் ஒரு சாய்வு நாற்காலியைப் போட சொல்லி, அதில் சாய்ந்தபடி ஏதோ இனிய கனவுகளில் ஆழ்ந்திருந்தாள் தரங்கிணி. கேட்டருகே கார் நிற்கும் ஓசை கேட்டு ஆவலோடு திரும்பிப் பார்த்தவளின் முகம் சுருங்கியது.

அந்த இந்தித் திரைப்பட நடிகரின் காப்பி! அவ னைப் பற்றி முன்பு எண்ணியது ஞாபகம் வரவே எச்சரிக்கையோடு நிமிர்ந்து அமர்ந்தாள் அவள்.

''பவர் ஆஃப் அட்டர்னி''யில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டாயாமே ''ரொம்ப சந்தோஷம்'' என்று மகிழ்ச்சி தெரிவித்தவன், அடுத்து தன் முதல் விஷத்தைக் கக்கினான். ''இரண்டு உரசு உரசினால் போதும், அந்தப் பெண் சொன்னபடி கேட் பாள் என்று வழி சொல்லிக் கொடுத்தேன். கில்லாடிப்ப யல், கச்சிதமாய் முடித்து விட்டானே!'' என்று அவன் பெருமை பேசவும் தரங்கிணியின் அடிவயிறு கலங்கியது.



# 9

'இரண்டு உரசு என்று மோகன்தாஸ் கூறிய [illegible] நெற்றியில் முத்தமிட்டு அருண் கையெழுத்து [illegible]துதான் தரங்கிணிக்கு நினைவு வந்தது.

[illegible] இல்லை. கையெழுத்து வாங்குவதற்காக [illegible] அப்படிச் செய்யவில்லை. இந்த வம்பு 'செறிதீங் [illegible] வாய்மொழியை நம்பி ஓர் இனிய நினைவை [illegible] கொள்ளக் கூடாது...

முடிந்த அளவு அமைதியைக் காட்டி, ''எனக்குக் [illegible] உடம்பு சரியில்லை, மிஸ்டர் மோகன்தாஸ். [illegible] உங்களோடு பேசிக் கொண்டிருக்க என்னால் [illegible] போய் வருகிறீர்களா?'' என்றாள் நாசூக்காக.

''நன்றாகத்தான் பேசுகிறாய்?'' என்று மெச்சியபடி [illegible] கிடந்த மோடாவை இழுத்துப் போட்டு அழையா [illegible] அமர்ந்தான் மோகன். தொடர்ந்து, ''என்ன பிரயோஜனம்? நாக்கில் இருக்கும் கெட்டிக்காரத் [illegible] மூளையில் இல்லையே. இந்த இரண்டு தடவலுக் [illegible] பத்து லட்சம் ரூபாய் கோட்டை விட்டுவிட்டாயே!'' என்று போலியாகப் பரிதாபப்பட்டான்.

''என்ன உளறுகிறீர்கள்?''

''நான் உளறுகிறேனா? உனக்கு இன்னமும் புரிய [illegible] என்று சொல்லு. பத்து லட்சம் எப்படி என்று [illegible] புரியவில்லை; அதுதானே? பாவம், நானே [illegible]குகிறேன், கேள். சும்மா என்றால், இந்தக் கட்டடம், [illegible] ஜன்னல், ஃபிட்டிங்ஸ், தோட்டத்தில் இருக்கும் [illegible] மரங்கள் என்று ஒவ்வொன்றுக்கும் விலை [illegible] ஏற்றலாம். இப்போது இது பாழடைந்த வீடு,

ஒன்றும் உருப்படியில்லை என்று சொல்லி வெறும் மனைக்கு மட்டும், அதுவும் சட்டப்படியான விலை மட்டும் தந்தால் போதுமே'' என்று கெக்கலித்தான் அவன்.

அவளிடம் அன்றுபட்ட அவமானத்தை மோகனால் மறக்கவே முடியவில்லை. அவன் வாழ்வில் ஒரு பெண்கூட இந்த மாதிரி அவனை விரட்டியது இல்லை. இருந்திருந்து ஓர் அனாதைக் கழுதை! இன்று அவளை அழவைத்து விடுவது என்ற வெறியோடுதான் அவன் வந்தது. அதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. அந்தக் காரணம் அவனுடைய தங்கை. அன்று ராமனிடம் அவமானப்பட்ட சூர்ப்பனகை ராவணனைத் தூண்டி விட்டாற்போல, அருண்குமார் தரங்கிணிக்காகப் பரிந்து பேசுவது தாங்காமல் அண்ணனைத் தூண்டிவிட்டிருந்தாள் அவள். 'அருண் என்னை ஏமாற்ற மாட்டார்' என்றாள் தரங்கிணி பிடிவாதத்துடன்.

அவன் சிரித்தான்! ''ஒரு பதில் சொல்லு. அவன் தன்னை ஏமாற்றுவானா, உன்னை ஏமாற்றுவானா? புரியலை? இந்த வீட்டை வாங்கப் போவது என் கம்பெனி. முன்னே என் கம்பெனியில் பாதிப்பங்கு என் தங்கைக்கு என்றேனே, நினைவு இருக்கிறதா? வினோதாவை மணக்கப் போகிறவன் அருண். பத்து லட்சத்தில் பாதி என் தங்கைக்கு வந்தாலும் அவனுக்கு வந்தாலும் ஒன்றுதானே?''

''வினோதா உங்கள் தங்கையா?'' என்று அதிர்ந்தாள் தரங்கிணி.

உள்ளூர ரசித்தபடி, ''அச்சச்சோ! உனக்குத் தெரியாதா, கண்ணு? ஆனாலும் இந்த அருண் சரியான படவாப் பயலாக இருக்கிறானே. வினுவை மணக்கப் போவதையும் மறைத்துத்தான் வைத்திருப்பான். அப்படித்



[illegible] [illegible]! போய்த் தொலைகிறான் விடு. உனக்கு நான் இருக்கிறேன். இசைவாக நடந்து கொண்டாயென் றால் இந்தப் பத்து லட்சமென்ன, பிச்சைக்காசு, உன்னை [illegible] இழைத்து விடுவேனே. இப்போது [illegible] ஒரு சின்ன...'' என்று கொஞ்சல் பேச்சுடன் [illegible] எழவும், வெறுப்புடன், ''வெளியே போ'' என்று [illegible] தரங்கிணி.

முகம் கறுக்க, ''என்னடி பெரிதாக அதட்டுகிறாய்? இப்போது உன்னை நான் என்ன செய்தாலும் கேட்க நாதி கிடையாது தெரியுமா?'' என்று அவளை [illegible] திமிருடன் ஓர் எட்டு எடுத்து வைத்தான் [illegible].

உள்ளம் பதறத் தொடங்கியதை வெளிக்காட்டாமல், [illegible]'' என்று உட்புறமாய்த் திரும்பிக் குரல் [illegible] தரங்கிணி.

''முருகனைச் செந்தூரில் போய் அழைக்க வேண்டு [illegible] இங்கே உன் வீட்டிலா...'' என்று ஏகத்தாளம் [illegible] உள்ளிருந்து வந்த வேலையாளைப் பார்த்த [illegible] திகைத்து, ''முருகன்! நீ இங்கே எங்கே?'' என்று [illegible].

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. உதவியாக இருக்க வேணுமின்னு எங்கய்யா என்னையும், முத்தம்மா [illegible] இங்கே கொணாந்து விட்டாங்க'' என்றான் [illegible] பணிவுடன்.

''அப்படியா!'' என்று தலையாட்டினான் மோகன். ''அதுதான் நானும் விசாரித்துப் போக வந்தேன். இரண்டு பேரும் இந்த அம்மாவை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அருண் முக்கால்வாசி எங்கள் வீட்டில் வினோதாவோடு கிடப்பதால் உங்களுக்குத்தான் அங்கே வேலையே இல்லையே. இதையாவது செய்யுங்கள்.

உடம்பைக் கவனித்துக் கொள்ளுங்கள், மிஸ் தரங்கிணி நான் வரட்டுமா?'' என்று நாசூக்காகப் பேசி விடை பெற்றான் மோகன்.

அருண் சொன்ன பேட்டை ரவுடிக்குக் கேவலம் இவன். உடம்பு சரியில்லாதவள், தனியே கிடப்பாள், ஏதாவது முயன்று பார்க்கலாம் என்று வந்திருக்கிறான். கூட ஆளைக் கண்டதும் ஓடிவிட்டான்! நோய்வாய்ப்பட்டவள் என்கிற மனிதத்தன்மை கூட இல்லையே! மிருகம்!

ஆனால் அந்த மிருகம் சொன்ன சில விஷயங்கள் அவளைக் குத்திக் குடைய தொடங்கவே, முருகனையே மீண்டும் அழைத்துக் கேட்டாள். ''இது யார் தெரியுமா முருகா?'' என்று.

''தெரியுங்கம்மா. நம்ம அய்யாவுக்குக் கூட்டாளி சேக்காணிம்மா'' என்று பணிவுடன் பதிலுரைத்தான் அவன்.

''வி... வினோதாவுக்கு?''

''அண்ணாச்சிங்கம்மா.''

''அந்த வினோதாவை... அருண்...''

''கட்டிகிடப் போறாங்கம்மா. ரெண்டு பணக்காரங்களும் சேர்றதால எங்கள் எல்லோருக்குமே நல்ல நல்ல துணிமணி, பாத்திரம் பண்டமின்னு நிறைய்யத் தரப்போறாங்களாம்'' என்றான் அவன் மகிழ்ச்சியோடு.

என்ன அநியாயம்! அவளிடம் நெற்றியில் முத்தமிட்டு முதுகில் தட்டிக் கொடுத்து.... என்றெல்லாம் பழகிவிட்டு எப்படி முடியும்? அதைவிட அதிகமாக வினோதா அவனோடு ஒட்டி, தொட்டுப் பழகியது காலம் கடந்து நினைவு வந்தது.

பின்னே இவளிடம் ஏன் இப்படிப் பழகினான்? மோகன் கொடுத்த ...



நினைவு வந்து நெஞ்சைக் கலக்கியது.

இல்லை. இதன் உண்மை அறிந்தே ஆகவேண்டும். ஐயம் திரிபறத் தெரிந்து கொண்டே ஆகவேண்டும்.

மற்றவர்களிடம் என்ன பேச்சு? அருணிடம் கேட்டு விடுவது என்ற முடிவுக்கு வந்தவள், காய்ச்சலினால் பலவீனம் முற்றிருப்பதைச் சற்றும் சட்டை செய்யாமல் கைக்கு வந்த பணத்தை எடுத்துக் கைப்பையில் போட்டுக் கொண்டு கிளம்பி விட்டாள்.

அருண்குமாரின் அலுவலகத்தின் எதிரே ஆட்டோ நின்றபோதுதான் அவனைப் பற்றி நிறுத்தி கேட்கும் அளவுக்கு அவன் எதையும் சொல்லவில்லை என்பது புரிந்தது.

எதிர்காலம் பற்றிப் பேசியபோதும் அவனே வாழப் போவது என்று அவன் சொல்லவில்லையே! நெற்றியில் முத்தமிட்டதும், மார்பில் சாய்த்து தட்டிக் கொடுத்ததும் நொந்த உயிருக்கு ஆறுதல் தரவென்றும் கூறலாமே.

மனம் கலங்கி அவள் நின்றது சில கணங்களே.

இருக்கட்டும். அவளோடு அவன் பழகும் நோக்கம் என்ன என்பதை நேருக்கு நேர் கேட்டுத் தெரிந்து கொள்வதில் தப்பு இல்லை. சும்மா, வெறும் நட்புக்காக என்று சொன்னால், இது மாதிரி நட்பு எனக்குப் பழக்கம் இல்லை என்று விலகிக் கொண்டுவிட வேண்டியதுதான். அதனால் கேட்பதில் தப்பில்லை என்று எண்ணி நேரே அவனது அறையைத் தேடிச் சென்றாள்.

முதல் தடவையாக வருகிறாள் என்ற போதும், வரவேற்புக்கு என்று தனி ஆள் இருந்ததால் அவனது கேபினுக்கு எளிதாகவே செல்ல முடிந்தது. ஆனால் அவன்தான் அங்கே இல்லை.

''மிஸ் வினோதாவை 'பியூட்டி பார்ல'ருக்கு அழைத்துப் போயிருக்கிறார்'' என்றாள் அவனுடைய செகரட்டரி.

பியூட்டி பார்லருக்குப் போக அவளுக்கு வழி தெரியாதாமா? இவன்தான் அழைத்துப் போக வேண்டுமா?

கொதிப்பும், கூடவே கலவரமுமாக அவள் அருணின் கேபினை விட்டு வெளிவந்தபோது, அங்கே அமர்ந்து வேலை செய்து கொண்டிருந்த மற்றவர்கள் எழுந்து ஒரு பெரியவருக்கு வணக்கம் செலுத்தக் கண்டாள்.

தும்பைப்பூத் தலையை லேசாக அசைத்து வணக்கங்களை ஏற்று வந்து கொண்டிருந்த அவர், தரங்கிணியைப் பார்த்ததும், ''யாரம்மா நீ?'' என்று விசாரித்தார்.

''நீங்கள் யார்?''

''ஷ். பெரியவர்'' என்றார்கள் யாரோ.

பெரியவர்! அருண்குமாருடைய சீனியர் பார்ட்னர்! இவருக்குத் தெரியாமல் இருக்குமா?

சட்டென முடிவு செய்து, ''சார், உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டுமே. இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுவேன்'' என்றவள் அவரது கேள்விக்கு இன்னமும் தான் பதில் சொல்லவில்லை என்பதை உணர்ந்து, ''என் பெயர் தரங்கிணி, சார்'' என்றாள்.

''ஓகோ! அருணைப் பார்க்க வந்தாயா? அவன் வினோதாவோடு பார்லருக்குப் போயிருக்கிறான்...'' என்றவர் அவள் பேசாதிருக்கவும், ''என்னம்மா?'' என்று கேட்டார்.

''ம்... மன்னிக்க வேண்டும். வினோதாவை 'பியூட்டி பார்ல'ருக்கு அழைத்துச் செல்ல அருண் ஏன் போக வேண்டும்? அவளாலே...'' என்று சொல்லும் போதே



அவர்கள் இருவரும் பார்லருக்கு போனது இவருக்கு எப்படித் தெரியும்? இப்போதுதானே வந்தார் என்று மனம் ஓடியது.

லேசாகச் சிரித்தார் பெரியவர். ''நாளைக் கட்டிக் கொள்ளப் போகிறவர்கள்... சமயம் கிடைக்கும்போது சுற்றாமல் என்ன செய்வார்கள். வேறு ஒரு வேலையாக என்னிடம் சொல்லிப்போக வீட்டுக்கு வந்தானா, வினு பிடித்துக் கொண்டு விட்டாள்.''

''வினு? வினோதா உங்கள் வீட்டில் எப்படி?''

''ஓ! உனக்குத் தெரியாதா? வினோதா என் பேத்தி. அதனால்தான். இருவருக்கும் திருமணம்... என்னம்மா? என்ன விஷயம்?''

அவரது பேச்சு காதிலேயே விழாதது போல எழுந்து வெளியே சென்றாள் தரங்கிணி. இவ்வளவு தூரம் நெருக்கமும் பிணைப்பும் இருக்கையில் அவள் எம்மாத்திரம்? ஆனால் அவன் அவள் மனதைக் கலைப்பானேன்?

ஏனோ? கலைத்ததால்தானே பத்து லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது! அவள்தான் முட்டாள். ஒன்றும் புரிந்து கொள்ளத் தெரியாமல் ஏமாந்து...

''தரு! நீ எங்கே இங்கே?'' என்று அருண்குமாரின் குதூகலக்குரல் - ஆமாம் குதூகலக் குரல்தான். வழியெங்கும் வருங்கால மனைவியிடம் கொஞ்சி விளையாடி இருப்பானே, குதூகலத்துக்கு என்ன குறை? - வியந்தது.

''ஏன்? வரக்கூடாதா? வந்தால் உங்கள் வண்டவாளம் தண்டவாளம் ஏறிவிடும் என்கிற பயமா?''

''என்ன உளறுகிறாய்?'' என்றவன் குரலோடு முகமும் கடுத்தது.

''உளறலா? உண்மை தெரிந்து கொண்டு விட்டேன். வக்கீல் சார்? ஒரு பேதைப் பெண்ணை ஏமாற்றிப் பத்து

லட்சம் சம்பாதிக்கப் போகிறீர்களே, அவ்வளவு பணத்தை என்ன செய்யப் போகிறீர்கள்? வருங்கால மனைவிக்கு வைரம் இழைக்கப் பயன்படுத்தப் போகிறீர்களா?''

''மனிதன் என்றால் நம்பவும் தெரியவேண்டும், தரங்கிணி'' குரல் பிசிர் அடித்தது.

''நம்புவதா? உங்களையா? ஒரு சமயத்தில் உங்களை நம்பி விட்டேனே என்பதுதான் என் வருத்தமெல்லாம். போகட்டும். இந்தப் பத்து லட்சத்துக்கு எவ்வளவு பெரிய பாடம் படித்திருக்கிறேன்! யாரையும், முக்கியமாக உங்களை நம்பவே கூடாது என்கிற பாடம்!''

வெறுப்பும் கொதிப்புமாக அவள் பேசமுடியாமல் பேசவும் அருண் தன் கோபத்தைக் கைவிட்டான்.

அருகே சென்று, ''தரு, என்னம்மா இது....'' என்று பற்றிய கையைத் தட்டி விட்டாள் தரங்கிணி.

''இன்னும் எதற்கு இந்த நாடகம்? அதுதான் திரை விழுந்தாயிற்றே'' என்றவள் வெளியே ஓடிப்போய், வந்து கொண்டிருந்த ஓர் ஆட்டோவை நிறுத்தி ஏறினாள்.

பின் தொடரப் போனவனை, ''அருண், என்னப்பா இது?'' என்ற பெரியவரின் குரல் தேக்கியது.

ஒரு கணம் பேசாதிருந்து விட்டு, ''சாரி அங்கிள்'' என்றான் அவன்.

ஒரு சிறு மவுனத்தின் பின், ''பரவாயில்லை. வினுவின் குணத்துக்கு அவளைத்திருத்த உன்னால்தான் முடியும் என்று நினைத்தேன். கடவுளின் எண்ணம் வேறுவிதமாக இருக்கிறது போப்பா. போய் அந்தப் பெண்ணைப் பார். அவள் வேறு ஏதோ தப்புத் தவறாக நினைத்திருப்பாள் போலத் தெரிகிறது. நான் வேறு ஒத்து ஊதிவிட்டேன்'' என்று அனுப்பி வைத்துவிட்டு பெருமூச் செறிந்தார்.



அருணும் அவருக்கு ஒரு பேரனைப் போலத்தான். அவனாவது நன்றாக இருக்கட்டும்.

கைக்குக் கிடைத்த துணிமணிகளைப் பெட்டியில் அடைத்துக் கொண்டு அறையிலிருந்து தரங்கிணி கிளம்பு சிறு வேளையில் அங்கே போய்ச் சேர்ந்தான் அருண் குமார்.

வழிமறைத்து நின்றவனை வெறுப்புடன் நோக்கி, ''உங்களோடு ஒட்டிக் கொண்டு அந்த வினோதா வரவில்லையா?'' என்று குத்தலாகக் கேட்டாள்.

''அவள் எதற்காக என்னோடு வரவேண்டும்?''

''உங்களை மணக்கப் போகிறவள் என்பதால்.... என்றாள் தரங்கிணி, தலையைத் திருப்பிக் கொண்டு.

''அப்படி யார் சொன்னார்கள்?''

''அவளுடைய அண்ணன்.''

தோளைக் குலுக்கினான் அருண். ''மோகன் பேச்சில் உண்மை எத்தனை சதம் இருக்கும் என்று உனக்குக் கண்டுபிடிக்கத் தெரியாததற்கு நான் என்ன செய்வது?''

கோபமாக முறைத்து, ''அவனுடைய தாத்தா - உங்கள் சீனியர் பார்ட்னர் - அவரும் சொன்னாரே! அவரும் பொய்யரா?'' என்று மடக்கினாள் அவள்.

''இல்லை. ஆனால் அப்படி நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்... லுக், சகாயம் அங்கிளும் என் தந்தையும் தொழிலில் கூட்டாளிகள். நட்பாய்ப் பழகிய குடும்பங்கள். எனக்கு ஈடான வயதில் வினோதா பிறந்ததுமே இது ஒரு பேச்சு, கிராமங்களில் அத்தை பிள்ளை மாமா மகள் என்பதில்லையா? அதுபோல். அதுவே அங்கிளுக்கும் ஆசை.''

''அப்படியானால் உங்கள் பெற்றோர்கூட.''

''இல்லை. வினோதா குடும்பத்துக்கு ஒத்து வரமாட்டாள் என்பார்கள் அம்மா.''

ஒரு நினைவில் தலையைத் திருப்பி, ''தொட்டுத் தொட்டுப் பழகிவிட்டு என்ன பேசுகிறீர்கள்?'' என்றாள் சினக்குரலில் அவள்.

''சின்ன வயதிலிருந்து ஓடிப்பிடித்து சேர்ந்து விளையாடிய பழக்கம். தொட்டுத் திருப்புவதும், கை பற்றி இறக்கிவிடுவதும்... இதுபோல எதுவுமே பெரிதாகத் தோன்றுவது இல்லை. ஆசையில் தொட்டேன் என்று வினோதாகூடச் சொல்ல மாட்டாள் தெரியுமா? ஏன், அப்படி ஆசையில் தொடவில்லை என்பதுதான் பெருங்குறையே. பெருமை என்று நினைக்க வேண்டாம். நிஜம்.

''அப்படி ஆசையில் தொட்டதும், மேலும் மேலும் தொட விரும்புவதும் உன்னைத்தான்; உன்னை மட்டும் தான்...

''தரு, இப்போது ஊருக்குப் போயிருந்தபோது உன் ஆசிரமத்தைப் போய்ப் பார்த்து, கையிலிருந்த பத்தாயிரத்தையும் நீ வளர்ந்த இடம் என்கிற ஒரே காரணத்துக்காக நன்கொடையாகக் கொடுத்துவிட்டு வந்தேன், தெரியுமா?

''தரு... இன்னமும் என்மேல் நம்பிக்கை வரவில்லையா?... உன் ஐயம் நீக்க நான் என்ன செய்ய வேண்டும் சொல்லு... இல்லை, நீ சொல்ல வேண்டாம் எனக்கே தெரியும்'' என்று கைப்பெட்டியில் இருந்த பத்திரத்தை வெளியே எடுத்தான் அருண்குமார்.

''இந்தா, நீ கையெழுத்துப் போட்ட பத்திரம். இதில் நீ போட்ட கையெழுத்துதானே, அந்தக் கையெழுத்துக்காகத்தான் நான் உன்னிடம் சரசமாடியதாக எண்ண வைத்தது. இதைக் கிழித்து எறிந்துவிட்டால் உன் நம்பிக்கை மீண்டு விடுமல்லவா?'' என்று அவன் பத்திரத்தைக் கிழிக்கத் தொடங்கியபோது தரங்கிணியின் கை அவனது கையைப் பற்றிக் கிழிக்க விடாமல் தடுத்தது.



அவளது முகத்தை ஒருகணம் ஆழ்ந்து நோக்கிய அருண், அந்தக் கைப்பிடி விடாமல் அவளை அணைத்துக் கொண்டான்.

இருவருமாகச் சற்றுநேரம் அதே நிலையில் இருந்தபோது மாமரக் கிளையில் இருந்து குயில் ஒன்று கூவியது.

சட்டென அவள் முகத்தில் வேதனையின் நிழல் படிவதைக் கண்டு அவள் முகத்தை இரு கைகளாலும் ஏந்தி நெற்றியில் முத்தமிட்டான் அருண்.

''ஒன்று செய்யலாமா தரு! இந்த வீட்டை நாம் விற்க வேண்டாம். உன் தாத்தாவின் ஆசைப்படி இந்த வீட்டில் அவருடைய பேத்தியே வாழட்டும். கொசுறாகப் பேத்தியுடைய கணவனாக நானும் சேர்ந்து கொள்கிறேன். அதற்கப்புறமாக... ஒன்று... இரண்டு... மூன்று போதுமல்லவா?'' என்று அவன் குறும்பாகக் கேட்கவும் வெட்கமும், அதை மீறிய மகிழ்ச்சியுமாக முறுவலித்தவளின் முகம் மீண்டும் மாறியது.

''மறுபடியும் என்னடா?'' என்று உருகினான் அவன்.

''உங்கள் வீடு? இங்கே உங்களுக்கும் வீடு இருக்கு இல்லையா? அதன் மேல் உங்களுக்கும் பிரியம்...''

''தேவுடா! இந்த மாதிரி 'சென்டிமென்ட்'டெல்லாம் நமக்குக் கிடையாதுடா அப்பா!'' என்று தோளைக் குலுக்கினான் அவன். ''கேள் கண்மணி, இங்கே அம்மா அப்பாவோடு முன்பு இருந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு நானே ஒரு ஃப்ளாட்டில்தான் இருக்கிறேன். அம்மா அப்பாவுக்கும் குன்னூர் வீடுதான் ரொம்பப்

பிடித்திருக்கிறதாம். அதனால் பிரச்சினையே கி
யாது... ஒன்றே ஒன்று தவிர'' என்று அவன் திடுமெ
வெகு சோகமாகினான்.

''என்னது?....'' என்றாள் தரங்கிணி கவலையுற்று

''ஒன்றுமில்லை...'' என்றான் அவன் சோகமாகவே
''பெண்டாட்டி வீட்டில் வாழப்போகிற கணவன் ஆ
போகிறேனே; அவள் ''போடு தோப்புக்கரணம்'' என்
றால் எண்ணிக் கொள் என்கிற நிலையாகி விடுமோ
என்கிற பயம்தான்'' என்று அஞ்சுகிறவன் போல நடிக்க
முயன்று முடியாமல் நகைக்க, அவனோடு தரங்கிணியும்
இணைந்து இனிமையாகச் சிரிக்கத் தொடங்கினாள்.